்க்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 25 வியாழக்கிழமை (07.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :132

## ஒடுக்கப்பட்ட இனங்களுக்காக குரல் கொடுத்தவர் பாப்பரசர்

### தமிழ் மக்கள் சார்பாக தலைவர் பிரபா அஞ்சலி



கிளிநொச்சி,ஏப்.7

ஒடுக்கப்பட்ட இனங்களுக்காக குரல் கொடுத்து வந்தவர் பரிசுத்த பாப்பரசர்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த இரங்கல் செய்தி வருமாறு:-

மானுடத்தின் விடிவிற்காக அயராது உழைத்த ஒரு மகத்தான ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்துவிட்டது.



உலக சமாதானத்திற்கும், தேசங்கள் மத்தியிலான சகவாழ்விற்கும், புனித பாப்பரசர் ஆற்றிய பணி அற்புதமானது அனைவராலும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனைக்குடியில் கான்ஸ்டபிள் நேற்றுச் சுட்டுக்கொலை

கல்முனைக்குடி,ஏப்.7

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த கல்முனைக்குடி களஞ்சியசாலைக்குப் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

முகமூடி அணிந்து வந்த 8 பேர் அடங்கிய குழுவினர் இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை 4 மணியளவில் இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. கல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு சுனாமி சிசுவின் தாயை கண்டறிய மரபணுச் சோதனை

கொழும்பு,ஏப்.7

கடல் அனர்த்தத்தின்போது கடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் 3 மாத வயதுடைய இன்னொரு சுனாமி பேபியின் பெற்றோரை இனங்காண்பதற்கு மரபணுப் பரிசோதனை நடத்துமாறு கொழும்பு பிரதான நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குழந்தையின் உண்மையான தாயார் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக -

குழந்தைக்கு உரிமைகோரும் பெண்ணினதும், அதனைக் கடத்தியவர் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணினதும் மற்றும் குழந்தையினதும் மரபணுப் பரிசோதனைகளை நடத்துமாறு நீதிவான் குசல சரோஜினி வீரவர்தன உத்தரவிட்டார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சமர்ப்பித்த அறிக்கையை ஆராய்ந்த பின்னரே இவ் உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

மேற்படி மரபணுப் பரிசோதனையை நடத்தி முடிவை அறியத்தருமாறு களனிப் பல்கலைக் கழக மருத்துவ பேராசிரியர் டபிள்யூ அபேவர்த்

(16ஆம் பக்கம் பார்க்க)

# எஸ்.பி. - ரணில் முரண்பாடு!

## சிறையில் இருந்தபடி காரசாரமான கடிதம்

கொழும்பு,ஏப்ரல்7

**சிறையில் இருக்கும் - ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் - எஸ்.பி.திஸநாயக்கா தமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் சில செயற்பாடுகளினாலும், சில செயற்பாடின்மைகளினாலும் கடும் விசனமுற்றிருக்கிறார் எனத் தெரிகிறது.**

**சிறையில் இருந்தபடி தமது ஆத்திரத்தைக் கொட்டித்தீர்க்கும் வகையிலும், ரணிலின் செயற்பாட்டை விமர்சித்தும் காரசாரமான கடிதம் ஒன்றைக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில தினங்களுக்கு முன்னர் அவர் அனுப்பிவைத்திருக்கிறார் என நம்பகரமாக அறியவந்தது.**

சிறைவாசம் அனுபவித்துவரும் தம்மை விடுதலை செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை மற்றும் கட்சி அமைப்பாளர்களை நியமிக்கும் விவகாரம் ஆகியவை குறித்து இந்தக் கடிதத்தில் எஸ்.பி.திஸநாயக்கா கடுமையான விமர்சனத்தைச் செய்திருக்கிறார் எனத்தெரிகிறது.

சிறைக்குச் செல்ல முன்னர் கட்சிக்கு அமைப்பாளர்களை நியமிக்கும் விடயத்தில் தாம் வகுத்த திட்டங்களை இப்போது கட்சித் தலைவர் மாற்றியமைத்துள்ளமை, தமது சிபாரிசுகளுக்கமைய சில தொகுதி அமைப்பாளர்களை நியமிக்காமை, மக்களால் ஒதுக்கப்பட்டவர்களெனக் கருதப்படுபவர்களைக் கட்சித் தலைமை மீண்டும் கட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துகின்றமை, கட்சிக்காகப் பாடுபட்டவர்களை அமைப்பாளர்களாக நியமிக்காமை போன்ற பல்வேறு விடயங்களை எஸ்.பி.திஸநாயக்கா இந்தக் கடிதத்தில் விலாவாரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எஸ்.பியின் இந்தக் கடிதம் ஐ.தே.க. தலைமைத்துவத்திற்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று உதயனுக்குக் கருத்து வெளியிட்டன.

எஸ்.பி. திஸநாயக்கா விரும்புகின்றபடி தம்மால் கட்சியை நடத்தமுடியாது எனத் தமது கட்சியின் அரசியல் விவகாரக் குழுவின் சகாக்கள் சிலருக்கு ரணில் விக்கிரமசிங்க 'கமெண்ட்' அடித்தார் எனவும் கூறப்படுகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### புதுக்குடியிருப்பில் நேற்று நான்கு முனைப் பேரணி

# 8 ஆயிரம் மக்கள் அணிதிரண்டு அரசுக்கு எதிராக ஆக்ரோஷம்!

- புதுக்குடியிருப்பிலிருந்து ந.விக்கினேஸ்வரன்-

புதுக்குடியிருப்பு,ஏப்.7

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை விடுதலைப் புலிகளிடம் ்கையளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி புதுக்குடியிருப்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

நேற்றுக்காலை 9 மணிக்குப் பேரணிகள் ஆரம்பமாகி புதுக்குடியிருப்புச் சந்தியை வந்தடைந்தன. ஒட்டுசுட்டான் வீதியில் ஐயன்கோயில் முன்றிலில் இருந்தும் பரந்தன் வீதியில் துர்க்கா வீதியடியில் இருந்தும், மாத்தளன் வீதியில் பிரதேச செயலக முன்றிலில் இருந்தும், முல்லைத்தீவு வீதியில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக இருந்தும் பேரணிகள் ஆரம்பமாகின. நான்கு முனைகளிலிருந்தும் பேரணிகள் புதுக்குடியிருப்புச் சந்தியை வந்தடைந்ததும் அங்கு அரசுக்கு எதிராக கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

முல்லை மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் எஸ். வேதவனம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் உட்படப் பலர் அங்கு உரையாற்றினர்.

கண்காணிப்புக் குழுத் தலைவருக்கான மகஜர்கள் நாடாளுமன்ற உறுப்பினர். ச. கனகரத்தினத்திடம் கையளிக்கப்பட்டன.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், அன்னையர் முன்னணி, மாணவர் ஒன்றியம், ஆசிரியர் சங்கம் என்பன உட்பட 9 அமைப்புகள் மகஜர்களைக் கையளித்தன. இந்தப் பேரணியில் சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் அரசின் செயற்பாடுகளையும் இராணுவத்தினரின் அத்துமீறல்களையும் கண்டித்து ஆக்ரோஷமாகக் கோஷங்களை எழுப்பியதுடன், சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர். (த-353)

# வெலிகந்தையில் கருணா குழுவினரின் முகாம் இருப்பது முற்றிலும் உண்மை!

### கண்காணிப்புக் குழுத் தலைமைப் பிரதிநிதி சாட்சியம்

ஶ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட வெலிகந்தைப் பிரதேசத்தில் கருணா குழுவின் முகாமொன்று இருப்பதாக இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைப் பிரதிநிதி பி.ஆர். ஸ்மன் உறுதிப்படுத்தியுள்ளார் எனசெய்திஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கும் மார்ச் மாதம் இரண்டாம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதிநாள் விசாரணை நேற்று மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வ

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக நேற்று நல்லூரில் கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம்.ஏப்.7

அரசிடம் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று யாழ்.நல்லூர்ப் பிரதேச மக்கள் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவேண்டும்.

தமிழர்கள் மத்தியில் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவேண்டும். அரசியல் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும்.

சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். என்ற நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே மக்களால் இந்தக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

யாழ்.நல்லூர் கோட்ட பொது அமைப்புகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

நேற்றுக் காலை நல்லூர் ஆலய முன்றிலில் ஒன்று திரண்ட மக்கள் அங்கிருந்து பேரணியை ஆரம்பித்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பெறுபேறு குடாநாட்டில் இன்று வெளியாகும்

கொழும்பு.ஏப்.7

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் குடாநாட்டில் இன்று வெளியாகும்.

மேற்படி பரீட்சை முடிவுகள் நேற்றுக் காலை பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டன. அத்துடன், நேற்று நண்பகல் முதல் இணையத்தளம் மூலமும் பெறுபேறுகளை அறிந்துகொள்ளக்கூடியதாகவிருந்தது.

இதற்கிடையில் - யாழ்ப்பாணம், வன்னி மாவட்டப் பெறுபேறுகளைப் பொறுபேற்றுக் கொண்டு பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்று மாலை தரைமார்க்கமாக யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டார் என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இன்று காலை வன்னியிலும் நண்பகல் அளவில் யாழ்ப்பாணத்திலும் பரீட்சை முடிவுகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்

(16ஆம் பக்கம் பார்க்க)

# தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரைகள் ஒழுங்கின்றி நடப்பதாக முறைப்பாடு

## கல்விச் செயற்பாடுகளில் நிர்வாகம் அசமந்தம் எனப் புகார்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் ஒழுங்காக நடப்பதில்லை. இது விடயத்தில் கல்லூரி நிர்வாகம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமிழீழ சர்வதேச மாணவர் பேரவையிடம் முறையிட்டிருக்கின்றனர்.

தொழில்நுட்பக் கல்லூரியில் அண்மைக்காலமாக மாணவர்களுக்குரிய விரிவுரைகள் ஒழுங்கான முறையில் நடைபெறுவதில்லையெனவும் - இதனால், தூர இடங்களிலிருந்து கற்கைகளுக்கு வருகின்ற மாணவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்புவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், கல்லூரியின் விரிவுரை நேரங்களில் ஆடம்பர நிகழ்வுகளையும், வரவேற்புபசார நிகழ்வுகளையும் நடத்துவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் கற்கை நெறிகளுக்கென கொண்டுவரப்பட்ட கற்றல் உபகரணங்கள் பல காணாமல் போயிருப்பதால் செய்முறைக் கற்கை நேரங்களில் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாகவும் பாதிக்கபபட்ட மாணவர்கள் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரியின் அண்மைக் கால நடவடிக்கைகள் தொடர்பாக இதுபோன்ற பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக மாணவர் பேரவையின் பொறுப்பாளர் ந.கணணன் தெரிவித்தார். (ஐ-13)

## தண்ணீர்த் தாங்கி திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.7

பிரான்ஸில் உள்ள புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் நிதி உதவியுடன் வட இலங்கை சர்வோதய அமைப்பினால் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கியின் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

வித்தியாலய அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக பழையமாணவர் சங்க உபதலைவர் செல்வி.க.புஸ்பமணி கலந்துகொள்வார். (த)

# விஞ்ஞானச் சங்கத்தின் மாநாடு பல்கலையில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 13 ஆவது வருடாந்த மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்ச்சிகள் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் வருடா வருடம் விஞ்ஞானச் சங்கம் வழங்கும் பேராசியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப் பதக்க விருது கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் எரிக் கருணநாயக்கவுக்கு வழங்கப்பட்டது.

விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் எஸ்.இராஜதுரை விருதை வழங்கினார்.

இதன் பின்னர் எரிக் கருணநாயக்கவின் விசேட உரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பலரது உரைகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 13 ஆவது வருடாந்த மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு டாக்டர் திருமதி எஸ்.சிவச்சந்திரனும் நூலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகளுக்குப் பேராசிரியர் வி.அருள்நந்தியும் தலைமைதாங்குவார்கள்.

டாக்டர் கே.சிவபாலன், டாக்டர் எஸ்.நவநீதன் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். (8)

# இன்னும் இரு தினங்களுக்கு மழை தொடரும் சாத்தியம்

## வளிமண்டலத் திணைக்கள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.7

குடாநாட்டில் தற்போது பெய்துவரும் மழை தொடர்ந்து இன்னும் இரு தினங்களுக்கு நீடிக்கும் சாத்தியம் உள்ளது என திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2ஆம் திகதி 24 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் 3ஆம் திகதி 18.3 மில்லிமீற்றரும், 4ஆம் திகதி 5.8 மில்லிமீற்றரும் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை 34.9 மில்லிமீற்றர் மழையும் பெய்துள்ளது. செவ்வாயன்று பெய்த மழையே இந்த ஆண்டுக்குரிய இன்றுவரையிலான அதிகூடிய மழைவீழ்ச்சியாகும்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் இன்றுவரை 108.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது - என்று அவர் மேலும் கூறினார்.(எ-13)

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 13ஆவது வருடாந்த அமர்வுகள் நேற்று ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் எரிக்கருணநாயக்க உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:பிரபா)*




# நெல்லியடியில் இருதினங்கள் 'செவ்விளக்கு' ஆற்றுகை

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நுண்கலைத்துறையின் வழிநடத்தலில் தயாரிக்கப்பட்ட 'செவ்விளக்கு' ஆற்றுகை எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

திறந்த அரங்கில் இடம்பெறும் இந்த ஆற்றுகை சீன பிஜீங் ஒபேரா வடிவத்தைச் சார்ந்த ஆற்றுகை ஆகும்.

கடந்தமாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தின் திறந்த வெளியில் ஆற்றுகை செய்யப்பட்ட 'செவ்விளக்கு' நாடகமானது மக்களை ஒன்றுதிரட்டும் அரங்காக தனது பயணத்தை தொடங்கியுள்ளது.

பிரதேசங்கள் தோறும் நிகழும் பயணத்தின் முதற்கட்டமாக நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 09.04.2005 10.04.2005 ஆகிய தினங்களில் மாலை 7 மணிக்கு ஆற்றுக்கை செய்யப்படவுள்ளது. சீன பீஜிங் ஒபேரா வடிவமான இந்நாடகமானது ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீன மக்களை அடக்கியாண்டபோது ஜப்பானியருக்கு எதிராக கிளர்ந்தெழும் சீன மக்களின் உணர்வை தனித்துவமான இசையும் நடனமும் கலந்து வெளிப்படுத்தி நிற்கின்றது. (ஐ)

# சமய சந்நிதிகளில்

வலி.தென்மேற்கு,ஏப்.7

சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 24.04.2005 ஆம் திகதி இரதோற்சவமும், 25.04.2005 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

உற்சவ தினங்களில் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை தெய்வீகத் தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (எ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.7

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத் கிரியைகள் நேற்று புதன் கிழமை விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகின.

நாளை மறுதினம் சனிக்கிழமை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். கிரியா திலகம் சிவஸ்ரீ தி. சங்கராஜக் குருக்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நிகழ்த்துவார். (எ)

# ஓட்டங்களைக் குவிக்கிறது இலங்கை; அத்தபத்து, ஜயவர்த்தன அபாரச் சதம்

## முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களுக்கு 351

அத்தபத்து, ஜயவர்த்தனவின் சதங்களால் இலங்கை அணியும் முதல் இன்னிங்ஸில் வலுவான நிலையில் உள்ளது. நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின்போது இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 351ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நேப்பியரில் நடக்கிறது. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது இலங்கை அணி அதன் முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஜயசூரிய 31 ஓட்டங்களுடனும் அத்தபத்து 14 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

3 ஆவது நாள் ஆட்டம் நேற்று நடந்தது. களத்திலிருந்து இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். 95 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது ஜயசூரிய, மார்ட்டினின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அவர் 66 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து களமிறங்கிய சங்கக்கார 5 ஓட்டங்களுடன் 'போலட்' முறையில ஆட்டமிழந்தார். 3 ஆவது விக்கெட்டுக்காக அத்தபத்து, ஜயவர்த்தன ஜோடி சேர்ந்தனர். இருவரும் மிகச் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 243 ஆக இருந்தபோது அத்தபத்து சதம் அடித்தார். இது டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது 12 ஆவது சதமாகும்.

அவர் 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அஸ்லேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அவருக்குப் பதிலாக திலான் சமரவீர களமிறங்கினார். இவர் ஜயவர்த்தனவுடன் ஜோடி சேர்ந்து பொறுமையாக துடுப்பெடுத்தாடினார், ஜயவர்த்தனவும் நேற்றைய ஆட்டத்தில் சதமடித்தார்.

இறுதியில் ஆட்டநேர முடிவின்போது இலங்கை அணி அதன் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஜயவர்த்தன 118 ஓட்டங்களுடனும், சமரவீர 34 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக மார்ட்டின் 2 விக்கெட்டுக்களையும், அஸ்லே ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும். (க-3)

# பல்கலை. - ஹென்றீஸ் அணிகள் வெற்றி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்சசிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின கால் இறுதி ஆட்டத்தில் நேற்றையதினம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற போட்டியில் யாழ். லீக்கைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக அணியும் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டதில் சமநிலை உடைப்பு உதைமூலம் 4:2 என்ற கோல் கணக்கில் பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த முல்லை விளையாட்டுக் கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தமையால் 1:0 என்ற கோல் கணக்கில் முல்லை விளையாட்டுக் கழகத்தை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிகொண்டது. (த-86)

## பாப்பரசரின் திருவுடலுக்கு

# லட்சக்கணக்கானோர் கண்ணீர் அஞ்சலி; தரிசிக்க இன்று இரவுவரை சந்தர்ப்பம்

வத்திகான்,ஏப்.7

பாப்பரசரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த அதிகமான விசுவாசிகள் வத்திக்கான் வருகின்றமையால் அவரின் திருவுடலுக்கு அஞ்சலி செலுத்தும் சந்தர்ப்பத்தை இன்று (வியாழன்) இரவுவரை நீடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் திருவுடலுக்கு மணித்தியாலத்திற்கு 18 ஆயிரம் பேர்வரையானோர் கண்ணீரஞ்சலி செலுத்திவருகின்றனர் என வத்திக்கான் அறிவிததுள்ளது.

கடந்த இரு நாள்களில் மாத்திரம் 10 லட்சத்திற்கும் அதிகமானோர் பாப்பரசரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்கள். பெருந்தொகையான விசுவாசிகள் அவரின் திருவுடலுக்கு அஞ்சலி செலுத்த வத்திக்கான் வந்து குவிகின்றனர். இதனையடுத்து அஞ்சலி செலுத்தும் காலம் இன்று வியாழன் இரவு வரை நீடிக்க வத்திக்கான் தீர்மானித்திருக் கிறது. நாளை பாப்பரசரின் இறுதி நிகழ்வுகள் நடைபெறும்.

இதேவேளை -

அடுத்த பாப்பரசரை தெரிவுசெய்வதற்கான பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்று வத்திக்கான் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதியின் பின்னரே புதிய பாப்பரசரின் தெரிவிற்கான நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கூடிய 183 கர்தினால்கள் சபையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

80 வயதுக்குட்பட்ட 117 கர்தினால்கள் புதிய பாப்பரசர் தெரிவில் வாக்களிக்கவுள்ளனர்.(ஐ-க)

## இரத்த அழுத்தத்தை வெள்ளைப் பூண்டு தடுக்கும்

நுரையீரலைத் தாக்கக்கூடிய மிகவும் மோசமான இரத்த அழுத்தத்தை வெள்ளைப் பூண்டில் உள்ள ஒரு பதார்த்தம் தவிர்ப்பதாக விஞ்ஞானிகள் கூறியிருக்கின்றனர். பல்மெரி 'ஹைபடென்ஸன்' என்றழைக்கப்படும் இரத்த அழுத்த வகை, இதயத்திலும் இரத்த நாளங்களிலும் பெரும் சிக்கல்களை ஏற படுத்தும். இவ்வாறான இரத்த அழுத்தம் ஏற்படும்போது நுரையீரலுக்கு குருதியைக் காவிவரும் நாடிகள் பாதிக்கப்படுகின்றன. வெள்ளைப்பூண்டில் உள்ள எரிசன் என்ற பதார்த்தம் இதனைத் தடுத்து நிறுத்துகின்றது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் திருவுடலைத் தரிசிப்பதற்காக வத்திக்கான் சென்.பீற்றர் தேவாலயத்தின் முன் காத்திருக்கும் பொதுமக்களைப் படங்களில் காணலாம்.

உலக அரங்கில்

## ஈராக் புதிய ஜனாதிபதியாக ஜலால் தலபானி தெரிவு

பக்தாத்,ஏப்.7

ஈராக்கின் புதிய ஜனாதிபதியாக குர்திஷ் இனமக்களின் தலைவர் ஜலால் தலபானி நேற்று தெரிவுசெய்யப்பட்டார். இதன் மூலம் ஜனவரி மாதத் தேர்தலின் பின்னர் நிலவிவந்த இழுபறிநிலை முடிவுக்குக்கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்தோடு, உப ஜனாதிபதிகளாக சுனி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த முன்னாள் இடைக்கால ஜனாதிபதி காஸி யாவர் மற்றும் ஷியா முஸ்லிம் பிரிவைச்சேர்ந்த நிதியமைச்சர் அதல் அப்துல் மஹதி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். மேற்படி ஜனாதிபதியும், இரு உப ஜனாதிபதிகளும் பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்வர். ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த பழம்பெரும் அரசியல்வாதி இப்றாஹிம் அல் - ஜாபரி ஈராக்கின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதிகள் தெரிவுகளை பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் சதாம் ஹுசைன் சிறைச்சாலையில் இருந்து தொலைக்காட்சி மூலம் பார்த்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கில் சிறுபான்மையினமாக உள்ள குர்திஷ் இனத்தவர் ஒருவர் ஜனாதிபதியாகுவது இதுவே முதற்தடவையாகும்.

தெரிவு செய்யப்பட்டிருக்கும் புதிய அரசு இவ்வாண்டு டிசெம்பர் மாதம் மறுதேர்தலை நடத்தும (ஐ-க)

## பிரிட்டனில் மே 5 ஆம் திகதி தேர்தல்

லண்டன்,ஏப்.7

பிரிட்டனில் அடுத்த மாதம் 5ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும் என அந்நாட்டுப் பிரதமர் ரொனி பிளேயர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

தேர்தல் தினத்தை உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கு முன்னதாக பிரதமர் பிளேயர் பக்கிங்காம் அரண்மனைக்குச் சென்று நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு மகாராணி இரணடாம் எலிஸபெத்தைக் கேட்டுக்கொண்டார்.

பின்னர், டவுனிங் வீதி, 10 ஆம் இலக்கத்தில் உள்ள தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் முன்றிலில் - செய்தியாளர்கள் மத்தியில் - பிளேயர் தேர்தல் திகதியை அறிவித்தார்.

தொழிற்கட்சியின் தலைவராக அவர் சந்திக்கும் மூன்றாவது பொதுத்தேர்தலே மே 5ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலாகும்.

பிரிட்டனில் ஆட்சிப்பீடத்தில் 1997ஆம் ஆண்டுமுதல் தொழிற்கட்சி இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பில் பிரிட்டன் இணைந்து செயற்பட்டமை வாக்காளர்கள் பலருக்கு பிளேயர் மீதிருந்த நம்பிக்கையைக் குறைத்துவிட்டது.

(ஐ-3)

## உலகத் தலைவர்கள் வருவதால் வத்திக்கானில் பலத்த பாதுகாப்பு

ரோமாபுரியில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் பரிசுத்த பாப்பரசரின் இறுதிச் சடங்கில் பெருந்திரளான மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென். பீற்றர் சதுக்கத்தில் வைக்கப்பட்டுள்ள புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் திருவுடலுக்கு அஞ்சலி செலுத்தவென இரண்டு கிலோமீற்றருக்கும் கூடுதலான வரிசையில் மக்கள் காத்திருக்கின்றார்கள். சிலர் தமது அஞ்சலியைச் செலுத்துவதற்கு ஒன்பது மணித்தியாலயங்கள் கால் கடுக்க நிற்க வேண்டியிருந்தது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பாப்பரசரின் இறுதிச்சடங்கின் போது உலகத் தலைவர்கள் பலர் ஒன்றுகூடுவார்கள். சென். பீற்றர் சதுக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், ஈரான் ஜனாதிபதி மொகம்மட் கதாமி போன்ற உலகத் தலைவர்களுக்கான ஆசனங்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன.

பாப்பரசரின் இறுதிச்சடங்கில் 20 லட்சத்துக்கும் 40 லட்சத்துக்கும் இடைப்பட்ட மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தம்மால் இ[illegible]மான பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக நேற்று இத்தாலியப் பிரதமர் தெரிவித்தார்.

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் பூதவுடல் சென். பீட்டர்ஸில் முன்னிருந்த பாப்பரசர் 23ஆவது ஜோன் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தின் அருகல் அடக்கஞ்செய்யப்படும்.

இதேவேளை -

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் 117 கர்தினால்களுக்கும் வத்திக்கானில் பிரமாண்டமான அரண்மனை ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கை நாணயப்படி சுமார் 184 கோடி ரூபா பெறுமதியான இந்த அரண்மனையில் பாப்பரசரின் மார்பளவான வெண்கலச் சிலையும் அமைகக்கப்பட்டுள்ளது.

சென். பீட்டர் தேவாலயத்தின் அருகிலேயே இந்த அரண்மனை அமைந்துள்ளது. இந்த அரணமனையிலேயே புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நடைபெறவுள்ளது. மிகவும் பாதுகாப்பான இந்த அரண்மனையில் 110 அறைகள் உள்ளன.

அத்தோடு, புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்பட்டுவிட்டார் என்பதை அறிவிப்பதற்கு புதிய விதிமுறை ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. சென. பீட்டர் தேவாலயத்தின் மணி அடிக்கப்படுவதே அப்புதிய விதிமுறை. (ஐ-க)

## மொனாக்கோ இளவரசர் நேற்றுக் காலமானார்!

மொனாக்கோவின் இளவரசர் ரேய்னியர் தனது 81ஆவது வயதில் நேற்றுக்காலமானார்.

பல வாரங்களாக சுகயீனமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், உள்ளூர் நேரப்படி காலை 6.35 மணியளவில் உயிரிழந்தார் என அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதயநோய், சிறுநீரகக் கோளாறு மற்றும் சுவாசப்பைக் கோளாறு ஆகியவற்றினால் பெரிதும் அவதியுற்ற இளவரசர், ஐரோப்பாவில் அதிக காலங்கள் ஆட்சிசெய்தவர் என்ற பெருமையைக் கொண்டவர்.

1946ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இளவரசர் ரேய்னியருடைய பதவியையும், பொறுப்புகளையும் அவரது 47 வயது மகன் இளவரசர் அல்பர்ட் கடந்தவாரமே பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# அமெரிக்க ஜனாதிபதியை திங்களன்று சந்திப்பார் இஸ்ரேல் பிரதமர் ஷெரோன்

## மேற்குக்கரை யூதக்குடியேற்ற விவகாரம் தொடர்பாகவும் பேச்சு

டெல்அவிவ்,ஏப்.7

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அடுத்தவாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். அப்போது மேற்குக்கரையில் உள்ள யூதக் குடியேற்றத் திட்டங்களை விஸ்தரிக்க வேண்டாம் என்றும் -

அதற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறும் - அமெரிக்க ஜனாதிபதி, ஷெரோனைக் கேட்டுக்கொள்வார் என அறிவிக்கப்படுகின்றது.

இரு தலைவர்களுக்குமான பேச்சுக்கள் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பிரத்தியேக வாசஸ்தலத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவிருக்கின்றன.

இது குறித்து இஸ்ரேல் அதிகாரிகள் தகவல் தருகையில்:-

''இடம்பெயர்ந்த இஸ்ரேலிய மக்களுக்கு என 3500 வீடுகளை அமைக்கும் திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்படமாட்டாது. இந்த வருடத்தில் எந்த வித வீடமைப்புத் திட்ட நடவடிக்கைகளும் திட்டமிடப்படவில்லை" - என்று தெரிவித்தனர்.

இஸ்ரேலிய வீடமைப்பு அமைச்சர் ஐசெக், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை அதிகாரி அப்ரகாமுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "இந்த வருடத்தில் வீடமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஒப்பந்தங்கள் எதுவும் செய்து கொள்ளப்படமாட்டாது" என்று உறுதி கூறியுள்ளார்.

இதற்கிடையில், பலஸ்தீன அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில்:-

"காஸா முனையிலிருந்து இஸ்ரேலியர்களை வாபஸ் பெறப்போகிறார்கள் என்று கூறிக் கொண்டு மேற்குக்கரைப் பகுதியில் குடியிருப்பு நடவடிக்கைகளை இஸ்ரேல் விஸ்திரிக்க திட்டமிட்டிருக்கிறது."

- இவ்வாறு அவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

1967 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்தின் போது கைப்பற்றிய ஜெருசலேமின் கிழக்குப் பகுதி உட்பட சகல பிரதேசங்களையும் அதன் சொந்தப் பிரதேசம் என்று இஸ்ரேல் கருதி வந்ததுள்ளது. உலக நாடுகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.




## வடகொரிய அணுவாயுத விவகாரம் பேச்சுக்கான முயற்சிகள் தீவிரம்!

சியோல்,ஏப்.7

வடகொரியாவின் அணுவாயுத விவகாரம் தொடர்பாக தடைப்பட்டிருந்த ஆறுதரப்புப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பித்து நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடகொரியாவின் ராஜதந்திரி ஒருவர் இது சம்பந்தமான பேச்சுகளை நடத்த சீனாவுக்குச் சென்றுள்ளார். வடகொரிய உதவி வெளிவிவகார அமைச்சர் பெய்ஜிங்கில் சீன் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. பெய்ஜிங்கில் ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி தென்கொரிய பத்திரிகைகள் இது பற்றிச் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரியாவின் நெருங்கிய நட்புறவு நாடான சீனா, பேச்சுக்களை மீளஆரம்பிப்பதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.(ஐ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: நாதன் தொலைத்தொடர்பகம், பிரதான வீதி, பருத்தித்துறை. T.P. 2263278 (சி-42144)

### வீடு விற்பனைக்கு

இல.55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன் 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (43819)

### தவறிவிட்டது

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தை முகவரியாகக் கொண்ட கந்தையா தயாவதி என்பவரது தேசிய அடையாள அட்டை கொடிகாமம் - நெல்லியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ.தவராசா இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். (43891)

யோகராசா கஜேந்திரன் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் ரக்ஸ் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை முகமாலைக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் 05.04.2005 அன்று மாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காயத்திரி பான்சி, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P. 0776526840 (43905)

கையடக்கத் தொலைபேசி (Nokia) நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் 750 இலக்க மினிவானில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்:- க.கேதீஸ்வரன், செலிங்கோ காப்புறுதி (யாழ்.கிளை) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (43917)


**[...]சன் கல்வி நிலையம்**
**கோண்டாவில்**
**2005ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள்**
* தரம் – 04 * தரம் – 05 மற்றும் புலமைப் பரிசில்
ஆசிரியர்கள்:
S.S.செந்தூரன் R.T. அன்பழகன்
S.K. ரவீந்திரன்
**ஆரம்பம்: 10-04-2005 SUN. 8.30 a.m.**
(43784)(21-17-15)

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off stanly Rd)
Tel: 0777222422
**DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING**
QUICK BOOKS PRO + ACCPAC + MYOB
ஆரம்பம்:-
Batch I :-09-04-2005(10மணி)
Batch II :-10-04-2005(4மணி)
காலம்:- 4மாதம்

**மனித உரிமைகள் சான்றிதழ் கற்கைநெறி**

மேற்படி கற்கைநெறி (36 மணித்தியாலங்கள்) எமது நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ளது. இது வதிவிடக் கற்கை நெறியாக அமையும்.
*காலம்:* 11.05.05 தொடக்கம் 15.05.2005 வரை
*கல்வித்தகைமை:* குறைந்த பட்சம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்குரிய அடிப்படைத்தகுதி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஒன்றில், மனித உரிமைக் கல்வி பயன்படுத்தப்படும் ஒரு பணியில் தற்போது அமர்ந்திருக்க வேண்டும். அல்லது ஏதாவது பணியில் தொடர்ச்சியாக இரண்டு வருட அனுபவம். பட்டதாரியாக இருப்பின் பணி அனுபவம் தேவையில்லை.
★ *புலமைப்பரிசில், விண்ணப்பப் படிவம்:* கட்டணம் தொடர்பாக எமது நிர்வாகத்தின் தீர்மானத்திற்கேற்ப சில புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை எமது பணியகத்தில் வார நாள்களில் காலை 8.45 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். படிவங்களை பெறுவதற்கான கடைசித் தினம் 18.04.2005 பூர்த்தி செய்த படிவங்களை எமக்குச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் தினம் 25.04.2005.
*தொடர்ந்து நடத்தப்படவுள்ள வேறு கற்கைநெறிகள்:* காலம் பின்னர் அறிவிக்கப்படும்)
✦ *சான்றிதழ் கற்கை நெறி:* முரண்பாட்டு நிலைமாற்றம்
✦ டிப்ளோமா (180 மணித்தியாலம்): மனித உரிமைகள்
✦ டிப்ளோமா (180 மணித்தியாலம்): முரண்பாட்டு நிலைமாற்றம்
ஒவ்வொரு கற்கைநெறிக்கும் புதிய விண்ணப்பதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.
அருட்தந்தை **அ.இ.பேணாட்** (இயக்குநர்)
**சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகம் (செப்பாக்)**
**843, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.** (C/42157)(21-17-15)


### திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள். எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

### மணமக்கள் தேவை

EssEx லண்டன் வாழ். P.R கிடைக்கக் கூடிய சாத்தியமுள்ள கௌரவ குடும்ப 1970, சுவாதி, பாவம் குறைந்த, செவ்வாய் தோஷமற்ற, அழகிய கணக்கியல் பட்டதாரிக்குத் தகுதியான லண்டன், கனடா, பிரான்ஸ் நாடொன்றில் P.R உள்ள அல்லது Student Visa வில் கல்வி பயிலும் மணப்பெண்தேவை. தொடர்பு: போஸ்ற் மாஸ்டர் க.வி. மயில்வாகனம், கைதடி. (43875)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 இல் பிறந்த, மிருகசீரிடம் முதலாம் பாதம் (நல்லூர்) உடைய மணமகளுக்குத் தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2548 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (43876)

## வட்டு.பொலீஸ் நிலையக் கட்டடம் குறித்து விசாரணை

யாழ்ப்பாணம்,ஏப்.7

வட்டுக்கோட்டை அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கக் கட்டடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பொலீஸ் நிலையம் தொடர்பான முழுமையான அறிக்கையைத் தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் மேற்படி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கோரியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கத்தின் கட்டடத்தில் பொலீஸ் நிலையம் செயற்படுவதாகவும்-

இக்கட்டடத்திலிருந்து பொலீஸாரை வெளியேற்றி கட்டடத்தைப் பெற்றுத் தருமாறும் கோரி அதன் முகாமையாளர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பாகவே மனித உரிமை ஆணைக்குழு வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து முழுமையான அறிக்கை ஒன்றை கோரியுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி எஸ். பெரோஸ் தெரிவித்தார்.

அறிக்கை கிடைத்ததும் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார் அவர். (ஒ-7)

## 'சுனாமி' பாதித்தோருக்கு வீடமைப்பு நிதி

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு நிதியுதவியை மக்கள்வங்கி மற்றும் இலங்கை வங்கியூடாக அரசு மேற்கொண்டு வருகின்றது.

சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கு மேற்படி வங்கிகளூடாக இரண்டரை லட்சம் ரூபா நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியைப் பெறுவதற்குப் பிரதேச செயலரின் சிபாரிசுடன் மேற்படி வங்கிகளில் விண்ணப்பிக்கலாம்.

வங்கிகளூடாக வீடமைப்பதற்கான நிதியுதவிகளைப் பெறுபவர்களுக்கு வேறு வகையில் வீடமைப்பு நிதிகளோ, பொருள்களோ வழங்கப்படமாட்டாது என்று யாழ். அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்தார். (ஒ-202-203)

## இளைஞர் ஒருவர் விபத்தில் காயம்!

தென்மராட்சி,ஏப்.7

ஓடிக்கொண்டிருந்த 'லான்ட் மாஸ்டர்' வாகனத்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞர் மீது அந்த வாகனச் சக்கரம் ஏறியதில் அவர் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த வி.விக்னராஜா (வயது 24) என்பவர் இரு கால்களிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-117)


**இலவசம்**
**இளைஞர்களுக்கான பயிற்சி**
150 நாடுகளில் பயிற்சி நடத்தும்
(வாழும் கலைப்பயிற்சி அறநிலையம் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது)
இதில் கிடைக்கும் பயன்கள்:
★ மன இறுக்கம், மன உளைச்சல் நீக்கி, ஆத்ம சக்தியை உணர்ந்து ஆன்மீகவழியில் ஊக்கம்கொண்டு செவ்வனே பணிசெய்ய
★ நினைவாற்றல் பெருக
★ உடல் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் பெற
★ நேர்மை, வாய்மை, மனிதநேயத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள
18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இருபாலாருக்கும் 16.04.2005 ஆம் திகதி முதல் 22.04.2005 ஆம் திகதி வரை 7 நாள்களுக்கு காலை 7.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை. இலவச காலை, மதிய, மாலை உணவுடன் **யாழ்.நகர், சுழிபுரம், பருத்தித்துறை, நெல்லியடி** ஆகிய நான்கு முகாம்களில் பயிற்சி நடக்கும். குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ள[...]ன் தொடர்புகொள்ள:
**பதிவு இடம் நேரம்**
**நாவலர் மணி மண்டபம், நல்லூர்.** (கந்தசுவாமி கோயில் எதிரில்) யாழ்ப்பாணம். தொ.பே.இல: 222 3893 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை
**யா/வேலாயுதம் ம.வி., பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பருத்தித்துறை.** காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை. திங்கள் முதல் வெள்ளி வரை.
**51, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** தொ.பே.இல: 222 6048 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை
குறிப்பு: ஒவ்வொரு முகாமிலிருந்தும் திறமைமிக்க பத்து நபர்கள் மேற்பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவர். பரீட்சை எதுவும் இல்லை. காலை மதிய மாலை உணவு இலவசம்.


## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
ஆஅவ கடன் இல:- 2043-சிறீ (எஸ்எவ்)
மட்டக்களப்பு மாவட்ட நிர்மாண வேலைக்கான

## கேள்வி அறிவித்தல் - இல. 39

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ('ஆ.அவ') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன்பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும், NECORD, மட்டக்களப்பு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக் காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ. இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | BT/CAARP/ HS/09 | மட்டக்களப்பு. ஓட்டமாவடி கிராமிய வைத்தியசாலையின் முகாமைத்துவக் கட்டடம் கட்டம் - 1 நிர்மாணம் | M6 கட்டடங்கள் | 82,260/- |
| 02 | BT/CAARP/ HS/11 | மட்டக்களப்பு. புதுக்குடியிருப்பு சித்த ஆயுள் வேத வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் நிர்மாணம் | M5 கட்டடங்கள் | 115,000/- |
| 03 | BT/CAARP/ RD/01 | மட்டக்களப்பு. கரவெட்டி மகிழவெட்டுவான் வீதி சீர்ப்படுத்தல் | M6 நெடுஞ்சாலைகளும் பாலங்களும் | 91,260/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD உடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்துவருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆம் திகதிக்குப் பின்பு தங்களை ஒப்பந்தகாரர்களாகப் பதிவுசெய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ இத்தகைய வேலைகளை நல்லமுறையில் செய்து முடித்தவர்களாக இருக்கவேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்குமுன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி. 026-2227434. பக்ஸ். 026-2227401 ஈமெயில்: necord@sltnet.lk.)
6. கேள்வி ஆவணங்களை 07.04.2005 இலிருந்து 25.04.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000/ஐச் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம்.
7. பொறிவைத்த கேள்விகள் யாவும் *தலைவர், திட்ட கேள்விச்சபை, "நிகொட்", 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை* என்ற விலாசமிடப்பட்டு, 29.04.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர், உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
8. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 25.04.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.
9. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்குக் கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**த.லங்காநேசன்,**
**தலைவர், கேள்விச் சபை, நீகொட் திட்டம்,**
55,கந்தசுவாமி கோயில். வீதி, திருகோணமலை. சி 42156)(42-21-17-15)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# போராட்ட நியாயத்தை நியாயப்படுத்தும் தெற்கு

'சுத்திச் சுத்தி சுப்பரின் கொல்லைக்குள்' - என்றொரு பேச்சு வழக்கு உள்ளது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு தென்னிலங்கை அரசுடன் நடத்தப்படும் சமாதான முயற்சிகள், செக்கு மாடு சுற்றுவது போல சுற்றிச் சுற்றி ஆரம்ப இடத்துக்கே வந்துநிற்கின்றன. முன்னேற்றம் எதுவுமில்லை.

இரண்டு தசாப்த காலக்கொடூர யுத்தத்தை நிறுத்தி, அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்பளித்து, புலிகள் நடத்திய ஆறு சுற்றுப்பேச்சுக்களின் விளைவாகக் கிடைத்த ஒரேயொரு முன்நகர்வு ஒஸ்லோ பேச்சுத் தொடர்பான அறிக்கைதான்.

அந்த அறிக்கையில் -

"விடுதலைப் புலிகள் முன்வைத்த ஆலோசனைப்படி, வடக்கு-கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறையின் கீழ் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்கு இரு தரப்புகளும் (புலிகளும் அரசும்) இணங்குகின்றன" - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

சமஷ்டி முறைத்தீர்வுக்கு அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு இணங்கியிருந்தது.

அதன்பின் சு.க.-ஜே.வி.பி.என்ற கொள்கை இணக்கம் இல்லாத இரு கட்சிகளின் விநோதக் கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்து ஓராண்டு முடிந்துவிட்டது.

முன்னைய அரசு விட்ட இடத்திலிருந்து சமாதான முயற்சிகளை இந்த அரசு ஆரம்பிக்கும் என்றே மிகப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், மீண்டும் ஆரம்ப இடத்துக்கே - சுப்பரின் கொல்லைக்கே - வந்து நிற்கின்றது அது.

ஏற்கனவே, புலிகளுடன் நடத்திய பேச்சுக்களின்போது ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட சமஷ்டித் திட்டத்தைத் தொடர்ந்து ஆராய்ந்து முன்னெடுப்பதை விடுத்து, அதற்கு மக்கள் அனுமதி பெற சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து அரசுத் தலைவி பேசுகின்றார்.

அந்த வகையில் தீர்வு காண்பதற்கு நாட்டில் எண்பது வீதமான மக்கள் ஆதரவு என்றும் அவர் அடித்து முழங்குகின்றார்.

ஆனால், அவர் அப்படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முற்பட்டால் சமஷ்டித் திட்ட யோசனையை முறியடிப்போம் என்றும்-

சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு எண்பது வீதமான மக்களின் ஆதரவு உள்ளது எனக் கூறுவது முழுப்பொய் என்றும் -

உண்மையில் நாட்டின் எண்பது வீதமான மக்கள் அத்திட்டத்தை எதிர்க்கின்றார்கள் என்றும் -

ஜனாதிபதி குமாரதுங்க தலைமையிலான அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தமது அரசுத் தலைவியின் கூற்றுக்குப் பகிரங்கமாக மறுத்தான் அடிக்கிறார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான முன்முயற்சிகள் எவற்றையும் - முன்நகர்வு எதையும்- எடுக்காமல் ஆளும் கூட்டமைப்பின் கட்சிகளுக்குள் இப்படிக் கண்ணாமூச்சி விளையாட்டு நடத்துவதன் மூலம் தமிழ் மக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் காதில் கூட்டுச் சேர்ந்து பூச்சுற்றுகின்றார்கள் - தலையில் மிளகாய் அரைக்கின்றார்கள் - சிங்கள ஆட்சியாளர்கள்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒஸ்லோ இணக்கப்பாட்டின் அடிப்படையில் சமாதான முயற்சிகளை முன் நகர்த்துங்கள் என்று வலியுறுத்துகின்றது. அந்த இணக்கப்பாட்டின் ஒரு தரப்பான தமிழர்களும் அதற்குத் தயாராகக் காத்திருக்கின்றார்கள்.

ஆளும் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தோரும் அதன் தலைவியும் கூட அதே இணக்கப்பாட்டில் கூறப்பட்ட சமஷ்டி முறைத் தீர்வுபற்றித்தான் பிரஸ்தாபிக்கின்றார்கள்.

அதற்குப்பிறகும் இவ்விடயத்துக்குச் சர்வஜன வாக்கெடுப்பு, அது இது என்றெல்லாம் இழுத்தடிப்பது நியாயமா?

தமது அணி ஆட்சிக்கட்டிலில் - அரியாசனத்தில் - ஏற வேண்டும் என்ற ஒரே இலக்குக்காக பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குடன் ஜே.வி.பியினர் போன்ற பேரினவாதிகளை ஜனாதிபதி குமாரதுங்க கூட்டுச் சேர்த்துக் கொண்டார். அதற்காக - ஆட்சித் தலைவி தமது கூட்டுக் கட்சியைச் சமாளிக்க வேண்டும் என்பதற்காக - அக்கட்சியைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக - இனப்பிரச்சினைத் தீர்வுவிடயத்துக்குச் சர்வஜன வாக்கெடுப்பு என்று கூறி 'பாவ்லா' காட்டுவது நியாயமா?

'மயிலே, மயிலே இறகு போடு' என்றால் அது போடாது. பிடுங்கித்தான் எடுக்க வேண்டியிருக்கும் என்பார்கள்.

பேச்சு மூலம் - அமைதி வழியில் - சமாதான முறையில் - தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வைத் தாருங்கள் என்று சிங்களத் தலைமையிடம் கேட்டால் அவை தரப்போவதில்லை. தங்கத் தாம்பாளத்தில் நியாயத்தீர்வை வைத்து தமிழரிடம் நீட்டும் நியாய அரசியல் சிங்களத்துக்குத் தெரியாது. உரியதை - தர மறுப்பதை - பிடுங்கி எடுப்பதே சரியானது. கடந்த ஐந்து தசாப்த அரசியல் வரலாறு நமக்குக் கற்றுத்தந்த பாடம் அதுதான் எனத் தமது விடுதலைப் போராட்டத்துக்கு நியாயம் கற்பிக்கின்றார்கள் தமிழர்கள்.

தீர்வு முயற்சியில் இதய சுத்தியுடன் ஈடுபடாமல், இழுத்தடிப்புப் போக்கைக் காட்டும் சிங்களத் தலைமைகளின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழரின் விடுதலைப் போராட்ட நியாயங்களை மேலும் நியாயப்படுத்துகின்றனவே தவிர வேறில்லை.

# போர் மற்றும் 'சுனாமி' பாதித்தோருக்கு முதற்கட்டமாக ஆயிரம் வீடுகள்

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீளக் குடியமர்ந்துள்ளவர்களுக்கும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உலக வங்கியின் நிதியுதவியுடன் முதற் கட்டமாக 1000 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 51 கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு புனர்வாழ்வுத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் துரித காணிச் செயலணியின் ஓர் உபதிட்டமாக இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இத்திட்டங்களை மேற்கொள்வதற்கான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு விட்டன எனவும் பயனாளிகளின் தெரிவு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 90 வீடுகளும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 90 வீடுகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 125 வீடுகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 85 வீடுகளும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 85 வீடுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 65 வீடுகளும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 70 வீடுகளும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில்70 வீடுகளும், சாவகச்சேரியில் 125 வீடுகளும், ஊர்காவற்றுறையில் 40 வீடுகளும், காரைநகரில் 15 வீடுகளும், வேலணையில் 40 வீடுகளும், கரவெட்டியில்70 வீடுகளும், நெடுந்தீவில் 30 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 16 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன எனவும் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ- 203-204)

# பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் வவுனியாவில் குறைந்தன

## தடுப்பு நடவழக்கைப் பொறுப்பு அதிகாரி தகவல்

வவுனியா,ஏப்.7

வவுனியாவில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக நடைபெறும் வன்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் தற்போது குறைந்துள்ளன என்று பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான குற்றத்தடுப்பு நிலைய வவுனியாப் பொறுப்பதிகாரி எச்.கே.பத்மினி பிரேமலதா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகம் என்பவை தொடர்பாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றபோதும் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போது முறைப்பாடுகள் குறைந்துள்ளன.

கடந்த வருடம் 19 பாரியளவிலான சிறுவர் துஷ்பிரயோகங்களும் 30 சிறியளவிலான துஷ்பிரயோகங்களும் எம்மால் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார். 15 சிறுமிகள் கடத்தப்பட்டுள்ளதான முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

பெண்களுக்கு எதிராக கடந்த வருடம் 11 பாலியல் துஷ்பிரயோகங்களும் 3 கடத்தல்களும் இடம்பெற்றுள்ளன.

சிறுமிகளுக்கு எதிராகவே அதிகளவான வன்முறைகள் இடம்பெற்றதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் - என்று தெரிவித்தார்.

(ஐ- 164-202)

# காணி குறித்த பிரச்சினைகளைக் கவனிக்க செயலகத்தில் துரித செயலணி அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

குடாநாட்டில் உலகவங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தில் வீடுகள் அமையவுள்ள காணிகளின் உரிமையை உறுதி செய்யும் பணிகளை முன்னெடுக்க துரித காணிச் செயலணி அலுவலகம் ஒன்று யாழ்.செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

காணி ஆவணங்களைத் தொலைத்தவர்கள், இன்னொருவருக்கு வழங்கப்பட்ட காணியில் வேறொருவர் குடியிருத்தல், அரச காணிகள் சட்டபூர்வமாக வழங்கப்பட்டும் இதுவரை ஆவணங்கள் எதுவும் வழங்கப்படாதிருத்தல், கொலனிக் காணிகளில் வழங்கப்பட்ட அளிப்பு உத்தரவுப் பத்திரங்கள் பிரித்து வழங்கப்படாதிருத்தல், சட்ட விரோதமாக காணிகளில் குடியேறி இருத்தல் போன்ற பிரச்சினைகளுக்கும் -

தனியார் காணி உரிமை மாற்றங்கள், சட்டவிரோதமாக கோயில் காணிகள், நம்பிக்கை நிதியக் காணிகள், பாடசாலைக்கு பராதீனப்படுத்தப்பட்ட காணிகள், தனியார் காணிகள் போன்றவற்றில் குடியேறியிருப்பவர்களின் காணி தொடர்பான பிரச்சினைக்கும் இந்தச்செயலணி மூலம் தீர்வுகாணப்படும் -

ஏற்கனவே தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீடுகள் அமைக்கப்பட்ட காணிகள் வீடமைப்பு அதிகார சபைக்கு பாரப்படுத்தப்படாத விடத்து அந்தக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கவும் இச் செயலணி மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என செயலணியின் உதவிக் காணியாளர் கு.ஞானசேகரம் தெரிவித்தார்.

(ஐ-204-203)

# நயினை ஆலங்குளம் வீதியின் புனரமைப்பு ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

நயினாதீவு-ஆலங்குளம் வீதி புனரமைப்பு அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரும் வடகிழக்கு மாகாண காணி அமைச்சின் மேலதிக செயலாளருமாகிய ப.க.பரமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஸும் சிறப்பு விருந்தினராக யாழ்.உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கே.இராசையாவும் கலந்துகொள்வர்.

இப்புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் நயினாதீவுநாகபூஷணி அம்மன் வருடாந்த திருவிழாவுக்கு முன்னர் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் பொறியியலாளருமான நல்லையா செல்வநாதன் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் நயினை மக்கள் சங்கத்தின் பொருளாளரும் பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளருமான பூ.சிறீதரசிங்குடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-202)

# மக்கள் வங்கியின் உயர் அதிகாரி சனியன்று குடாநாட்டுக்கு விஜயம்

## அன்று 'பீப்பிள்ஸ் லீசிங்' கிளை திறப்பு



மக்கள் வங்கியின் பதில் பொது முகாமையாளர் ரி.கருணாசேன நாளை மறுதினம் சனிக்கிழமை குடாநாட்டுக்கு வருகிறார். அவர் இங்கு மக்கள் வங்கியின் அனுசரணை நிறுவனமான 'பீப்பிள்ஸ் லீசிங்' நிறுவனத்தின் யாழ். மாவட்டக் கிளையை யாழ்.கன்னாதிட்டியில் திறந்து வைப்பார்.

இதன் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பதில் பொது முகாமையாளருடன் 'பீப்பிள்ஸ் லீசிங்' நிறுவன நிறைவேற்று அதிகாரி குமாரகேயும் மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகளும் உடன் வருகின்றனர்.

இவர்கள் வடபிராந்திய மக்கள் வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடவுள்ளனர். அத்துடன், சுனாமி நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கி வரும் மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை கிளைகளுக்கும் நேரில் சென்று பார்வையிடுவர்.

இதன்மூலம் யாழ்.பிராந்தியத்தில் மக்கள் வங்கியின் செயற்பாடுகளை மேலும் சிறப்பாகச் செயற்படுத்த முடியுமென்றும் வாடிக்கையாளர் சேவைகளைச் சிறப்பாக வழங்க வாய்ப்பு ஏற்படும் என்றும் -

வங்கி வட்டாரங்கள் உதயனுக்குத் தகவல் தந்தன.

(ஓ)

### நாளை

பங்குனி 26
வெள்ளிக்கிழமை
08.04.2005
திதி : அமாவாசை
பின்னிரவு 02.40 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முற்பகல் 11.30 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 06.07 - 07.37
ராகுகாலம் : 10.37 - 12.07
(யாவும் பழைய நேரப்படி)

# காணித் தகராறு தொடர்பான மோதல்கள் அதிகரிக்கின்றன

## பொலீஸ் பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.7

காணித்தகராறுகள் தொடர்பான குழு மோதல்கள் குடாநாட்டில் அதிகரித்துள்ளன.

இத்தகவலைத் தெரிவித்தார் யாழ். பொலீஸ் நிலைய சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி சமரநாயக்க.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தம் ஓய்ந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் குடாநாட்டில் காணிகளின் விலைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

யுத்தகாலத்தின் போது இங்கிருந்து புலம் பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் வசித்து வருவோர் இங்குள்ள தமது காணிகள் மற்றும் வீடுகளை விற்று வருகின்றனர்.

இவர்கள் காணிகளை விற்கும் போது வீடுகளில் தற்காலிகமாகக் குடியிருப்பவர்களோடு தகராறுகள் ஏற்படுகின்றன. மற்றும் அயலவர்களிடையே எல்லைப் பிரச்சினைகளும் தலைதூக்குகின்றன.

இதன் காரணமாக அயலவர்களிடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

காணித் தகராறு தொடர்பாக குறைந்தது ஒரு நாளைக்கு ஐந்து முறைப்பாடுகள் யாழ்.பொலீஸ் நிலைய சிறு குற்றத்தடுப்புப் பிரிவில் பதிவு செய்யப்படுகின்றன.

இதில் பொலீஸாரால் தீர்க்க முடியாத காணித்தகராறுகள் அநேகமானவை நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன - என்றார்.

(ஐ-7)

### உதயவாக்கு

எளிய வாழ்க்கை பற்றி பேசுவதற்கும் தயங்குவதில்லை; எழுதுவதற்கும் தயங்குவதில்லை; வாழ்வதற்கு மட்டும் தயங்குகிறோம். - மு.வ.

# தமிழர் பகுதிகளில் படைமுகாம்களை மூடிவிட சர்வதேச சமூகம் அழுத்தம் தர வேண்டும்

## மன்னார் மாவட்ட பெண்கள் அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.7

இனப்பிரச்சினையை விரைவில் தீர்த்து தமிழா பிரதேசங்களில் உள்ள படை முகாம்களை அப்புறப்படுத்துவதற்குச் சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

- இவ்வாறு மன்னார் மாவட்டப் பெண்கள் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில பெண்கள் அமைப்புக்கள் மன்னார் வைத்திய சாலைச் சந்தியிலிருந்து பேரணி ஒன்றை நடத்தின.

அரசிற்கெதிராகவும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கெதிராகவும் நடத்தப்பட்ட இப் பேரணியின் முடிவில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, ஐக்கிய நாடுகள் சபை, அரச அதிபர் ஆகிவற்றிற்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்கு நாட்டினர் 1505இல் இங்கு வருவதற்கு முன் இலங்கைத் தீவில் இரண்டு சுதந்திர நாடுகள் இருந்தன. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுமையாகவும் தென்மேற்கு கரையோரமாக நீர்கொழும்பு வரையிலான நிலப்பரப்பும் தமிழர் ஆட்சிப் பிரதேசமாகவும், மத்திய தென்மேற்குப் பகுதிகள் சிங்களவர் பிரதேசமாகவும் இருந்தன. இறுதியாக 1948 வரை நிர்வாக வசதிக்காக இரண்டு நாடுகளையும் ஒன்றிணைத்து ஆண்டு வந்த பிரிட்டிஷ் அரசு தாம் வெளியேறும்போது முழுநாட்டையுமே சிங்களவர்களிடம் ஒப்படைத்துச் சென்றது.

அன்று முதல் ஆட்சிப் பொறுப்பேற்ற அரசுகள் எல்லாம் தமிழர்களை அழித்தொழித்து நாடு முழுவதையும் தனிச்சிங்கள, பௌத்த நாடாக்கும் முயற்சியிலேயே குறியாகச் செயற்பட்டன. இதன் பின்விளைவாக எமது பாரம்பரிய நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களால் பறிக்கப்பட்டன; வேலைவாய்ப்புகளும் பதவி உயர்வுகளும் மறுக்கப்பட்டன; தரப்படுத்தல் மூலம் உயர் கல்விவசதிகள் இல்லை என்றாயின. சகலதுக்கும் சிங்களம் கட்டாயமானதால படிப்பறிவற்றவர்களாக்கப்பட்டோம். இவற்றுக்கு மேலதிகமாகக் காலத்துக்குக் காலம் அரசு படையினரின் உதவியுடன் காடையர் கும்பலைத் தூண்டி எம் சொத்துக்களை அழித்தும் சூறையாடியும் எமது பொருளாதார வளங்களையும் சிதைத்து தமிழர்களைச் சகல துறையிலும் முடமாக்கியது. தமிழ் மிதவாதத் தலைவர்கள் அமைதி வழியிலான எதிர்ப்புக்களைக் காட்டிய போது ஆயுத முனையில் அடக்கியொடுக்கப்பட்டனர். இளைஞர்கள் தட்டிக் கேட்க முனைந்த போது கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்; பலர் காணாமற்போயினர்; மேலும் பலர் பிணங்களாக வீசப்பட்டனர்.

இனத்துரோகக் குழுக்களின் உதவியுடன் அரசு படைகள் எம்மினத்துக்குச் செய்த அட்டூழியங்களும் அடாவடித்தனங்களும் கணக்கிலடங்காதவை. இவை எதுவும் வெளிநாடுகளால் புரிந்துகொள்ளப்படவில்லை. அரசின் சக்தி மிக்க பிரசாரத்தில் உரிமைப் போர் பயங்கரவாதமாகக் கணக்கிடப்பட 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற உலக வழக்கிலில்லாத - ஜனாதிபதியால் ஏற படுத்தப்பட்ட ஒரு சொற்பதம் உலக சமுதாயத தால் நியாயமானதாக ஏற்கப்பட்டது.

இந்த 'சமாதானத்துக்கான யுத்தக' காலத தில்தான் தமிழினம் முன்னெப்போதுமில்லாத அழிவுகளைக் கண்டது. ஆனால், உலகம் இதைக கண்டுகொள்ளவில்லை. ஆனால், சளைக்காத உறுதிவாய்ந்த சுதந்திரத் தாகம் கொண்ட புலிகளின் வீரத்தாலும் பலத்தாலும் இலங்கையரசு ஆட்டம் காணவே, இனியும் தாக்குப்பிடிக்காத நிலையில் சமாதானத்துக்கு வர இணங்கியது. தொடர்ந்து யுத்த நிறுத்தமும் பேச்சுக்களும முன்னேறி இடைநடுவில் பேச்சுக்கள் நின்று போக தற்போது போருமற்ற, சமாதானமுமற்ற அமைதியுமற்ற, எதற்கும் எந்த உத்தரவாதமுமற்ற பொறுமையில் இன்று வாழுகிறோம்.

பேச்சுக்களில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்த ஓர் உடன்பாடும் அரசினால் நிறைவேற்றப்படவில்லை. மாறாக, ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் குடியிருப்பு நிலங்களிலுள்ள படைமுகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன; படையினர் பலம் அதிகரிக்கப்படுகின்றது.

மக்கள் வாழும் வதிவிடங்களில் படையினா எந்நேரமும் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி நடமாடவும் தாம் நினைத்த எதனையும் செய்யவுமவாய்ப்புண்டாக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாகப் பெண்களாகிய நாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் ஏராளம்! ஏராளம்! பெண்கள் கௌரவமாக நடமாட முடியவில்லை; தொழிலகளுக்குச் செல்ல முடியவில்லை; பாடசாலைகளுக்கும் கல்விக் கூடங்களுக்கும் பயமின்றிச செல்ல முடிவதில்லை. ஏன் வீட்டினுள்ளேயே பாதுகாப்பாக இருக்க முடியவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம இனப்பிரச்சினைதான். இப்பிரச்சினையினை விரைவில் தீர்த்து படைமுகாம்கள் அப்புறப்படுத்தப்பட சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-202)

## சாயி சிந்தனை

### ஆற்றல் நிறைந்த மனித மனம்



மனிதனாகப் பிறப்பது மிகவும் கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பு. காலம் மிகவும் மதிப்பு மிகுந்தது. இதயம் மிகவும் மென்மையானது. மனம் மிக இனிமையானது. மனிதத்தன்மை என்பது இத்தகைய இயல்புகளைக் கொண்டது. ஆனால், மனிதனால் தனது உள் நிறைந்திருக்கும் தனது உண்மையான இயல்பை துரதிருஷ்டவசமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மனிதத்தன்மை என்பது மனித உடலின் வடிவத்தில் மட்டும் நிறைந்திருக்கவில்லை. பிரபஞ்சத்தில் நிறைந்திருக்கும் அத்தனை சக்திகளும் மனிதனுள் நிறைந்திருக்கின்றன. மனிதனால் தனது ஆற்றலை புரிந்துகொள்ள முடியவில்லை. அதில் ஒரு சிறிய பகுதியைக் கூடப் பயன்படுத்துவதில்லை. அதனால், அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க முடியவில்லை. ஏன் இப்படி மதிப்பு மிகுந்த மிக அரியதான மனிதப்பிறவியடைந்தவன் இதமான இதயமும், இனிமையான மனமும் கொண்டவன் ஏன் அவற்றின் பயனை, அனுபவித்து அமைதியாக வாழ்வை அனுபவிக்க முடிவதில்லை? அவனது உட்புற ஆற்றலைப் புரிந்துகொள்ள முயலாமல், தனது உண்மையான இயல்பை, மறந்து, மனிதன் குறுகிய மனம் படைத்தவனாக ஆகிவிட்டான். சுயநலம் கொண்டவனாக இருப்பவன், மன அமைதியின்றித் தவிக்கின்றான் ஆகவே, மனதின் ஆற்றலைப் புரிந்து கொள்ள மனிதன் வழி தேட வேண்டும்.

*ஆதாரம்: சனாதன சாரதி*


## முதலாவது ஆண்டு திருமண நிறைவு வாழ்த்து



திரு. திருமதி செல்வேந்திரன் சந்திரகலா தம்பதிகள்

இன்று (07.04.2005) திருமண நிறைவு நன்னாளைக் கொண்டாடுவதையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்.

*இருமனமும் ஒருமனதாய் இணைந்து இல்லறச் சோலையிலே ஆண்டு ஒன்று நிறைவினைக் கொண்டாடி என்றும் அன்புடன் வாழ்ந்திடுவீர்! வாழ்க, வாழ்க!!*

கரணவாய் மேற்கு, கரவெட்டி.

மா. மார்க்கண்டு குடும்பத்தினர்.

(43672) (54-11-14)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

07.04.2005




பத்திரகாளி கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த **சுபாஷ்கொடி – கவிதா** தம்பதிகளின் செல்வப்புதல்வன் **துஷன்** (துச்சு)

தனது முதலாவது பிறந்தநாளை 07.04.2005 வியாழக்கிழமை கனடாவில் இருக்கும் தனது அப்பா, அம்மா, அப்பையா, அப்பம்மா, பபி மாமி மாமா, பெரியப்பா பெரியம்மா அவர்களுடன் கனடாவில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

துஷன் குட்டியை அம்பப்பா, அம்மம்மா, தயாமாமா, நளினிமாமி சிந்து, டனுஷன், அஜய் நிதர்சினி, ரதிச்சித்தி - ஆசிரியை, கிருபன் மாமா, பெரியக்காச்சி, சின்னக்காச்சி, வண்ணன்ரி, அரசுமாமா - லண்டன், சுபாசினி மாமி குடும்பம் - இந்தியா, யோகன்மாமா - லண்டன், தர்சினி மாமி - ஆசிரியை, கரன் மாமா - லண்டன், சிவாமாமா - ஆசிரியர் வவுனியா, கீச்சு மாமா கீதா மாமி, ராணி அக்கா குடும்பம் - சுவிஸ், சத்தியா குடும்பம் சுவிஸ், [illegible] - நோர்வே, சுதா அன்ரி குடும்பம், மதிச்சித்தி குடும்பம், ஜெயாசித்தி குடும்பம், இன்பாக்கா குடும்பம், பிறேமா அக்கா குடும்பம், பெரியமாமி குடும்பம் - வவுனியா, சிறிமாமி குடும்பம் - வவுனியா, சறோமாமி குடும்பம் - வல்வெட்டித்துறை, பெரியப்பா ஐயய்யா மாமன் மாமி, மச்சான் மச்சாள், பேரன் பேர்த்தி . பூட்டன் பூட்டி பொன்னுச்சாமி (தொண்டைமானாறு) மற்றும் உற்றார், உறவினர்கள் சந்நிதி முருகனை அருள்பெற்று பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறோம். (சி.42148)(42-21-14-34)

பருத்தித்துறை. தகவல்: **தயாமாமா, கிருபா மாமா.**



## உளமார நன்றி கூறுகின்றோம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற பழம்பெரும் ஆலயமான
**காரைநகர், மணற்காடு அருள்மிகு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்**
மஹோற்சவ 2 ஆம் நாள் விழாவான (26.03.2005) சனிக்கிழமை ஆலயத்துக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்தவர்களான:

- நல்லை ஆதீன முதல்வர் 2ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
- மூத்த சிவாச்சார்யர்களான
  - புங்குடுதீவு பஞ்சாட்சரக் குருக்கள் (கனடா)
  - கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள்
  - நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள்
  - சுன்னாகம் கதிரமலை சிவன்கோயில் குருக்கள் திருக்கேதீச்சர பிரதம குரு (அவுஸ்திரேலியா)
  - நயினை கை.வாமதேவக்குருக்கள் (கனடா) முதலான இருபதுக்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள்
  - யாழ்.மண்ணின் தலை சிறந்த நாதஸ்வர, தவில் வித்வான்கள்
  - ஆன்மீகப்பெரியார்கள், சான்றோர்கள் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் அருள்மிகு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மனின் பரிபூரண கிருபாகடாட்சமும் அருளும் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து உளமார வாழ்த்துகின்றோம்.

அத்துடன், இப்பெருவிழாவில் சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தோர்களின் ஆத்மசாந்திக்காவும் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகளின் சேம நலனுக்காகவும் அம்பிகைக்கு விசேட பிரார்த்தனை செய்யப்பட்டது.

"பரோபகாரமணி"
கே.கே.சுப்பிரமணியம் (J.P)
தம்பதியினர்.
T.P No.021 222 5768

"அறுகம்புலம்"
காரைநகர்.

(43878)(32-14-34-21)


## சுனாமியால் வடமராட்சி கிழக்கில் 500 வீடுகள் சேதம்

செம்பியன்பற்று,ஏப்.7

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதியில சுனாமி அனர்த்தத்தால் 500 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் சுனாமி அனர்த்தங்களினால் சேதமடைந்த வீடுகளின் விவரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ள தேசிய வீடமைப்பு அதிகாரசபையே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது. (8-36)

## கோண்டாவில் இளைஞன் திருமலையில் கைது

திருகோணமலை,ஏப்.7

கட்டைப்பறிச்சான் இராணுவச் சோதனை நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரணைமடுவில் இருந்து மூதூர் கிழக்கை நோக்கிச்சென்ற கந்தசாமி குகன் என்ற இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் -

அவரிடம் இருந்து 3 சயனைட் வில்லைகளும் இராணுவ இடுப்புப் பட்டியும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் எஸ். ஜெயவீரசிங்கம் கேட்டுள்ளார். (ஐ-204)

## இயக்குநர் சபை தெரிவு

அரியாலை,ஏப்.7

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக த. சிதம்பரப்பிள்ளையும், உபதலைவராக செ. சதானந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். மா. பிரபாகரன், இ.இரவீந்திரன், ச.ராகவன், சி.வீரசிங்கம், செல்வி ஆ. சாந்தகுமாரி ஆகியோர் இயக்குநர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (3-17)

## பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-202)

## வீதிகளைப் புனரமைக்குமாறு கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்கரையோர வீதிகளைப் புனரமைக்குமாறு பொது மக்கள் கோரியுள்ளனர்.

சுனாமி கடற் பேரனர்த்தத்தால் வடமராட்சி கிழக்குப் பகுதி கரையோர வீதிகள் மிகமோசமாகச் சேதமடைந்துள்ளன. இதனால் இப்பகுதி மீனவர்கள் பெருஞ் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். (8-36)

# மற்றவர்களின் உதவிகளில் தங்கிவாழாது சுயமாக உழைத்துவாழ முன்வரவேண்டும்



## அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்து

சங்கானை,ஏப்.7

மக்களுடைய தேவைகளை உணர்வுகளை அரச அதிகாரிகள் உணர்ந்து சேவையாற்ற வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது சொந்தக் காலில் நின்று தனது வாழ்வை முன்னேற்ற முயலவேண்டும். அரசால் வழங்கப்படும் நிவாரணத்தை நம்பி தனது குடும்பத்தை வாழவைக்கலாம் என்ற மனப்பாங்கில் வாழக்கூடாது.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் இவ்வாறு தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கி சங்கக் கட்டடத் திறப்புவிழா அண்மையில் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்றது.

வங்கிச் சங்கக் கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

சமுர்த்தி என்பதன் பொருள் சுபீட்சம் என்பதாகும். மக்கள் தங்கள் வாழ்க்கையில் சுபீட்சத்தைப் பெறவேண்டும் என்ற நோக்குடனேயே சமுர்த்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சமுர்த்திச் செயற்பாடுகளின் முழு அம்சங்களும் நிறைவு பெறத்தக்கவகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை அதன செயற்பாடுகள் முழுமைபெறவில்லை என்றே கூறவேண்டும்.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதற்கு உடனடி நிவாரணங்களை இந்த சமுர்த்திச் சங்கங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மக்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ளத்தக்க வகையில் சமுர்த்தித் திட்டம் தனது செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது.

இதனை எமது மாவட்ட மக்கள் முழுமையாக அறியச் செய்யவேண்டும் இந்தப் பொறுப்பு சங்க அமைப்பாளர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஒவ்வொரு மக்களும், இச்செயற்றிட்டத்தில் இணைந்து கிராமத்தை வளர்க்க வேண்டும். கிராம வளர்ச்சி மாவட்ட வளர்ச்சியைத் துரிதப்படுத்தும்.

இந்த மாவட்டத்திற்கு வருகின்ற வளங்கள் யாவும் மக்களின் தேவைக்கேற்ப செயற்பாடுகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தவேண்டும். இதற்கு அரச அதிகாரிகள் தமது கடமைகளை உணர்ந்து சேவையாற்ற வேண்டும். மக்களும் வெறுமனே நிவாரணத்தை மட்டும் நம்பி வாழாது, உழைத்துச் சேமிக்க முன்வரவேண்டும் - என்றார்.

யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரகுமார் உரையாற்றும் போது கூறியதாவது:-

சேமிப்புப் பழக்கத்தை ஒவ்வொருவரிடமும் ஊக்குவிக்க வேண்டும் இதற்கு சமுர்த்தி வங்கிகள் உதவி புரிகின்றன.

சமுர்த்தி வங்கியின் நன்மைகளைப் பெற சமுர்த்தி ஊழியர்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தின்மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கிராம மட்டத்தில் வளர்ச்சியைப் பெறவேண்டும் - என்றார்.

(ப-29-175-204)

# இலக்குடன் செயற்பட்டால் வெற்றிகளை ஈட்டலாம்

பாடசாலைகளில் கல்வியுடன் ஒழுக்கத்தையும் மாணவர்கள் மத்தியில் ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். விளையாட்டில் ஒரு குழு தனது இலக்கை ஒரு செயற்பாட்டின் மூலம் எவ்வாறு விரைவாக அடைகின்றதோ அதே போன்று அனைத்து விடயங்களிலும் இலக்குடன் செயற்படுவதன் மூலம் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்கண்டவாறு வலிவடக்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சுபுண்ணியசீலன் தலைமையில் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய உதவிப் பிரதேச செயலாளர் கூறியதாவது:-

விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்ட வேண்டும் இவை போட்டியாக அமையலாம்.

பொறாமையாக மாறக்கூடாது, திறமைகளை சமூகத்தின் நல்வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

குழுவாகச் செயற்பட்டு இலக்கை எவ்வளவு விரைவாக அடைகின்றோமோ அதேபோன்று, சமூக மட்டத்திலும் குழுக்களாகச் செயற்பட்டு விரைவில் இலக்குகளை நல்ல முறையில் நாம் அடைய வேண்டும் உதாரணமாக நீண்டகாலமாக பகைமை உணர்வுடன் இருந்த இந்தியா - பாகிஸ்தான்கூட இன்று கிரிகெட் போட்டிகளில் கவனமாக பகைமையை மறந்து விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட்டுகொண்டு இருப்பதையும் நாம் அவதானிக்கலாம. விளையாட்டுக்கள் மூலம் சாதிக்கமுடியாததென்று எவையும் இல்லை. சாதிக்க முடியாத பல் வேறு விடயங்களையும் விளையாட்டின் மூலம் சாதிக்க முடியும் - என்றார்.

தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பளார் எஸ்.கைலாசநாதன் உரையாற்றும போது கூறியதாவது:-

உயர் பாதுகாப்பு வலயத்தில் இப் பாடசாலை அமைந்துள்ள போதிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் நல்ல முறையில் இவ் விளையாட்டுப் போட்டியை நடத்தியமைக்காக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை பாராட்டவேண்டும்.

இப் பாடசாலை உயர்பாதுகாப்பு வலயத்தில் நெருக்கடிகளுக்கு மத்தியில் இருந்தாலும்கூட கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டமென எல்லாமட்டத்திலும் கல்வி ரீதியாகவும் விளையாட்டு ரீதியாகவும் உயர்ந்து நிற்கின்றது.

வலிகாமத்தின் கௌரவத்தை கல்வி ரீதியாகவும் விளையாட்டு மற்றும் துறைகளிலும் சாதனைகளை ஏற்படுத்தி பாதுகாத்துவருகின்றார்கள். இதற்குப் பெற்றோர்கள், பழையமாணவர்களும் கூட பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றமையும் பாராட்டத்தக்கதாகும் - என்றார். (ப-86)




# பாரம்பரிய இசைக்கருவிகளை பயன்படுத்துவதன் மூலம் ஈழத்து இசை மரபுகளை என்றும் பாதுகாக்கலாம்



## பேராசிரியர் மௌனகுரு தெரிவிப்பு

நல்லூர்,ஏப்.7

ஈழத்து இசை மரபு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும், பாடசாலைகள் தோறும், பாரம்பரிய இசைக் கருவிகளை கொண்ட இன்னிசை அணிகள் ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம் பாரம்பரிய பண்பாடுகளை எம் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளமுடியும்.

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிபிள்ளை நினைவாக சம்பந்தன் விருது பெற்ற மட்டக்களப்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.மௌனகுரு மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் சம்பந்தன் விருது வழங்கும் வைபவமும் துறவு, சைவத் திருமுறைப்பதப் பொருள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவும் அண்மையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றன.

2004 ஆம் ஆண்டிற்கான சம்பந்தன் விருதைப் பெற்றுக்கொண்டு ஏற்புரை நிகழ்த்திய பேராசிரியர் மௌனகுரு மேலும் பேசும்போது கூறியதாவது:-

போராட்டகாலங்களில் நான் இங்கு இருந்துள்ளேன். இங்குதான் சைவசித்தாந்தத்தைக் கற்கவும், கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் போன்ற கலைகளின் நுட்பத்தை அறியவும் யாழ்ப்பாணப் பண்பாட்டை, யாழ்ப்பாணத் தமிழ மரபைத் தெரிந்து கொள்ளவும் முடிந்தன. மட்டக்களப்பின் கூத்தை இங்கு மேடையேற்றிய போது அது நல்ல வரவேற்பைப் பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்று மட்டக்களப்பு பல்கலைக்கழகமும் வளரவேண்டும் என்று விரும்பிய பேராசிரியர்களை, பெரிய மனிதர்களை நினைக்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் எங்களது இசைக் கருவிகளைக் கொண்ட இன்னிசை அணியை அமைத்துள்ளோம். பட்டமளிப்பு விழாவின்போது அதுவே முன் செல்கிறது. தமிழனின் அடையாளமாக அதை ஏற்படுத்தியுள்ளோம். இங்கும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

செழுமையாக இருந்த நடனம், கூத்துக்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. அதை மீண்டும் செழுமைப்படுத்த வேண்டும். அதற்கான அறிவைத் தந்தது யாழ்ப்பாணமே. எமது மொழி, உணவு, உடை எல்லாமே ஒன்று. மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கை கலாசாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இதன் ஊடாகத்தான் வடக்கு - கிழக்கு மக்களின் ஒற்றுமை பலமாகும்.

1976 இல் நான் இங்கு வந்தபோது சம்பந்தர் பற்றி நிறையவே கேள்விப்பட்டேன். சந்தித்தும் உள்ளேன். எனினும் அவருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. அதற்காக இன்று துக்கப்படுகின்றேன். அவர் மிகவும் அற்புதமான மனிதராக இருந்துள்ளார்.

கணியன் பூங்குன்றனார், வள்ளுவர் ஊடாகச் சமத்துவம் கண்ட கம்பர், பாரதி போன்ற மக்களை முன்னிறுத்தி வந்த மரபு எங்களது. அது மக்களின் வளர்ச்சியுடன் இணைந்தது. அதையொட்டியதாகவே என்னுடைய செயற்பாடுகளும் உள்ளன - என்றார்.

பேராசிரியர் சிவலிங்கராசா தனது தலைமையுரையில் கூறியதாவது:-

பல்பரிமாணங்களைக் கொண்ட ஆழமான சிந்தனைமிக்க நல்ல மானிடம் பேணும் மனிதராக விளங்கியவர், ரசனையோடு கதைக்கும் பாரம்பரியம் கொண்டவர் பண்டிதமணி. சம்பந்தரது நூல்களைப் படித்துள்ளேன். பல்கலைக்கழகத்தில் படித்த சமயம் அவரைச் சந்தித்துமுள்ளேன். பண்டிதமணியும் சம்பந்தரும் நீண்ட பாரம்பரியத்தில் வாழ்ந்தவர்கள். கல்விப் புலத்திற்கும் ஈழத்தின் தமிழ் எழுத்துலகிற்கும் பெருமை சேர்த்தவர்கள். பேராசிரியர் மௌனகுரு உலகப் புகழ் பெற்றவர். எம்மத்தியில் வாழ்ந்தவர். ஆற்றல் படைத்த அவருக்கு இந்த விருது வழங்குவது மிகவும் பொருத்தமானதே- என்றார்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா அறிமுகவுரையில் பேசும்போது கூறியதாவது:-

இலக்கிய கலாநிதி பண்டிதமணியின் நினைவாக இந்த விருதை சம்பந்தனின் குடும்பத்தினர் வழங்கிவருகின்றனர். ஏற்கனவே இலக்கிய, நாடகத்துறைகளின் வளர்ச்சிக்குப் பணியாற்றிய பலர் இந்த விருதினைப் பெற்றுக் கொண்டனர். கடந்த ஆண்டிற்கான சம்பந்தன் விருது பெறுபவராக பேராசிரியர் மௌனகுரு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பல நூல்களை வெளியிட்டதுடன், நாடகம், கூத்து போன்ற எமது கலைகளின் வளர்ச்சியில் அவர் அளப்பரிய பங்கினை வழங்கி வருகிறார். இந்த விருதுக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டது மகிழ்சிக்குரியது என்றார்.

பண்டிதமணி நினைவுரையை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும் 'துறவு', 'சைவத்திருமுறைப் பதப்பொருள் அகராதி' ஆகிய நூல்களின் வெளியீட்டுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் நிகழ்த்தினார்கள்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், முன்னாள் அதிபர் ஆ.சபாரத்தினம் ஆகியோரும் பேசினார்கள். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸிடம் இருந்து சம்பந்தன் விருதை பேராசிரியர் மௌனகுரு பெற்றுக்கொண்டதுடன் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

துறவு, பதப்பொருள் அகராதி ஆகிய நூல்களின் முதல் பிரதிகளை பூரணி கிருபானந்தா, ச.தங்கமாமயிலோன் ஆகியோர் பேராசிரியர் மௌனகுருவிடமிருந்து பெற்றுக்கொண்டனர். (ப-111)

# பொருளாதாரப் போரிலும் வென்றால்தான் அரசியல் இலட்சியத்தை அடையமுடியும்!

## தொழிற்பயிற்சி வைபவத்தில் சொலமன் சூ.சிறில்



அரியாலை,ஏப்.7

தமிழர் தாயக தேசம் அன்று இரு முனைகளில் இருவகையான யுத்தங்களை சந்தித்தது. ஒன்று இராணுவ ரீதியிலான யுத்தம். மற்றது பொருளாதார ரீதியிலான யுத்தம். இராணுவ ரீதியிலான யுத்தத்தில் நாம் சர்வதேச மட்டத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். பொருளாதார யுத்தத்தில் சற்று பின்னடைவில்தான் நிற்கின்றோம். ஆனால் இந்த இரு முனைப் போராட்டங்களையும் நாம் வெற்றிகரமாக முன்னெடுத்தால்தான் எங்களது அரசியல் இலட்சியத்தை அடையமுடியும்.

இவ்வாறு தென்னிந்திய திருச்சபையினால் நடத்தப்படும் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளரும் யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான சொலமான் சூ.சிறில் சொன்னார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இன்றும் நாம் உணவிற்கும் மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்கும் சேவைகளுக்கும் தென்னிலங்கையையே நம்பி வாழ்கின்றோம். இந்த நிலைமை மாறவேண்டும். அல்லது மாற்றியமைக்க வேண்டும்.

இதை முன்னுணர்ந்த காரணத்தினாலேயே தான் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் மேதகு கலாநிதி சு.ஜெபநேசன் ஆண்டகை தனது மறைப்பணியுடன் சமூகப் பொதுப்பணியிலும் உழைத்து வருகின்றார். இதன் அறுவடைதான் இன்றைய இளைய தலைமுறையினருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வாகும். மேதகு கலாநிதி ஜெபநேசன் அவர்கள் தனது 14 வருட பேராயர் பணியில் மட்டுமல்லாமல் மக்களின் மனித நேயப் பணியிலும் தமிழ்ப் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர். தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நேசித்தவர். அதன் உண்மைத்தன்மையையும், அதன் நியாயப்பாட்டையும் சர்வதேச மட்டத்திற்கு துணிவுடன் எடுத்துச்சென்றவர். பலதுறை கல்வியும், ஆற்றலும, அனுபவமும் மிக்க ஆயர் அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றபோதும் அவரது இலட்சியமும், விடுதலைப் பற்றும் இளைப்பாறாது என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதற்காகவே என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்- என்றார்.

மேற்படி நிகழ்வு தென்னிந்திய திருச சபையின் கொக்குவில் வளாகத்தில் முதல்வர் அருட்பணியாளர் இராஜகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தென்னிந்திய திருச்சபையின் ஆயர் மேதகு கலாநிதி ஜெபநேசன், திருமதி விமலா ஜெபநேசன் அம்மையாரும், ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய பங்குத்தந்தை அருட்பணியாளர் றோ. ஜேசுராஜா, இறையியல் கல்லூரி பேராசிரியர் அருட்பணியாளர் பெஞ்சமின், பயிற்சி ஆசிரியர், மாணவிகளின் முதல்வர் ஆகியோரும் மங்கள விளக்கேற்றி வைத்து உரையாற்றினார்கள்.

பயற்சிபெற்ற பெண்களுக்கான சான்றிதழ்களை திருமதி விமலா ஜெபநேசன் அம்மையார் வழங்கியதுடன், பயிற்சி பெற்ற 250 இற்கு மேற்பட்ட பெண்களின் கைவண்மையில் உருவான கைப்பணி, மனையியல் பொருள்களின் காட்சி மண்டபத்தையும் திறந்துவைத்தார். (ஜ-17)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 07 - 1937

மறைவு 11 - 04 - 2002



## திருமதி இராசம்மா கனகரத்தினம்

திதி: 07-04-2005

அம்மா என்ற சொல்லுக்கு இலக்கணம் அமைத்த
எம் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சம்
இருக்கும் வரை நிலைத்திருக்கும்.

கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி. (43882)(26-14-15) - குடும்பத்தினர்.

# நிவாரணக்கிளை இடம்மாற்றம்

தென்மராட்சி,ஏப்.7

சாவகச்சேரி கண்டி வீதியில் இயங்கிவந்த தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிவாரணக் கிளை கடந்தவாரம் தொடக்கம் சாவகச்சேரி பொலீஸ் நிலைய வீதியில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கிவருகிறது.

இந்த நிவாரணக் கிளையில் செப்ரெம்பர் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் இக்கிளையில் நிவாரணப் பொருள்கள் பெறும் குடும்பங்கள் தமது நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (3-117)

# வலிகாமம் வலயத்தில் விஞ்ஞான ஆசிரியருக்குக் கூட்டம்

வலி.தெற்கு,ஏப்.7

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் தரம் 7 தொடக்கம் தரம் 11 வரை கற்பிக்கும் சகல விஞ்ஞான ஆசிரியர்களுக்குமான விஞ்ஞான பாட தர வட்டக் கூட்டம நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஜ-152)

# பாதைச்சேவை அதிகரிப்பு

குருநகர்,ஏப்.7

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே நடைபெற்றுவரும் படகுப் பாதை சேவையில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மேலும் ஒரு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நாளாந்தம் நான்கு சேவைகள் நடத்தப்பட்டன. கடந்த முதலாம் திகதி அதிகரிக்கப்பட்ட மேலதிக சேவையுடன் இச்சேவை ஐந்து சேவையாகத் தற்போது நடைபெற்று வருகின்றது. (3-51)

# தனியார் வைத்தியர் சங்கம் அங்குரார்ப்பணம்

நல்லூர்,ஏப்.7

தனியார் வைத்திய நிலையங்களைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் ஆங்கில மருந்து விநியோகத்தர்கள் இணைந்து யாழ்.மாவட்ட தனியார் வைத்திய நிலைய ஆங்கில மருத்துவ சேவையாளர் சங்கத்தை அமைத்துள்ளனர்.

தமிழீழ சுகாதாரத்துறையின் வேண்டுகோளைத் தொடர்ந்து மேற்படி சங்கம் உருவானது. சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் வைத்திய கலாநிதி கே.குலநாயகம், உப தலைவர் வைத்திய கலாநிதி வீ.குகதாசன், செயலாளர் வைத்திய கலாநிதி வீதியாகராசா, உப செயலாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராசா, பொருளாளர் வைத்திய கலாநிதி எஸ்.சண்முகானந்தன்.

நான்கு உறுப்பினர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது. (3-111)


## விசேட கழிவுக் கட்டணம் புதுவருடத்தை முன்னிட்டு

பிறக்கப்போகும் புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு அனுப்பவேண்டிய உணவுப் பண்டங்கள், உடுதுணிகள், அன்பளிப்புப் பொருள்கள், கடிதங்கள் ஆகியவற்றை உலகின் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

**கட்டண விவரம்**

ஐரோப்பிய நாடுகளுக்கு (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நெதலண்ட்) } 1 kg - 650/=

ஏனைய நாடுகளுக்கு (கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன்) } 1 kg - 950/=

தொடர்புகளுக்கு:

**RAINBOW TRAVEL & TOURS**

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)
தொலைபேசி 222 3918, 0777 328219.

Note: எமது ஸ்தாபனம் கொழும்பைத் தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்குகிறது.
(43845)(26-11-39)


# 11 ஆவது வருட அஞ்சலி

பிறப்பு 10 – 05 – 1974

இறப்பு 07 – 04 – 1994



## அமரர் சிவானந்தராஜா தயானந்தன்

(தயா)

பதினொரு ஆண்டுகள் கழிந்தாலும்
தவிக்குதையா எம் இதயம் உமையெண்ணி
நினைத்திருப்போம் நாம் என்றும்
உமை வந்து சேரும் வரை.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய வீரபத்திர சுவாமியை வேண்டுகின்றோம்.**

வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (43869) (39-11-34)

சி.சிவானந்தராஜா (அப்பா),
சி.மீனலோஜினி (அம்மா),
சகோதரர்கள், மச்சாள்.

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 12 - 11 - 1929

விண்ணில் 09 - 03 - 2005



## அமரர் மார்க்கண்டு கந்தையா

(கந்தசுவாமி கோயிலடி, கோப்பாய் மத்தி)

அன்பின் திருவுருவே! எங்கள் அப்பா!!
கருணையுடன் வழிகாட்டி நின்றீர்கள்
துன்புற்ற வேளையிலும் துணிவுடனே எமைக்காத்து
வாழ வழியமைத்து கடமை முடிந்ததென நினைத்தீர்களோ?
தாயும் தன் துணைவேண்டி விரைந்து அழைத்தனளோ?
அப்பா! உங்கள் முகம் தேடி அலைகின்றோம்.
ஆத்மசாந்திக்காய் வணங்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் மல்லாவியில் அவரது புதல்வியின் இல்லத்தில் நாளை (08.04.2005) வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

442/4, திருநகர்,
மல்லாவி. (43873) (39-11-34)

த.மனோன்மணி
குடும்பத்தினர்.
(கோப்பாய் மத்தி).


Direct Start

## புத்தாண்டு சிறப்பு சலுகை

Diploma in MS Office (MSO)
Diploma in Computer Studies (DICS)
Diploma in Computer Programming (DCP)
Diploma in Desktop Publishing (DTP)
Diploma in Web Design (DWD)
Diploma in Computerised Accounting (DCA)

மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன்

இலவச பாடநூல்களும் குறிப்புகள்



Select Any Course Pay 3,900/- only

- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- 12 ஆண்டுகள் கணினி கல்விச் சேவையில் அனுபவம்
- இலவச பாடநூல்கள் குறிப்புகள் ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இடம் மாறி கற்கும் வாய்ப்பு
- ICM UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கட்டணங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்
- நவீன சமகால கணினி பாடநெறிகள்

அனைத்து பாடநெறிகளும் 3 – 4 மாதங்கள்

**ASIAN COMPUTER SYSTEMS**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. ✆ 0773-122198 | கண்டி வீதி சாவகச்சேரி. ✆ 077-3039587 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |



இப்பொழுது இலங்கையில்



சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்

Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs

Direct
Importers
Wholesalers
& Retailers

SOLE DISTRIBUTORS

**OCEANICK IMPEX**

192, Main Street, Colombo-11.
Tel : 2336720, 2327168 Wholesale : 2384131
Fax : 2326961 E-mail : oceanick192@yahoo.com

# பொதுக்கட்டமைப்பை உடனடியாக உருவாக்கக்கோரி மக்கள் பேரணி

## வெள்ளியன்று சண்டிலிப்பாயில்

வலி.வடக்கு.ஏப்.6

சுனாமி அனர்த்தத்துக்கான பொதுக்கட்டமைப்பைத் தாமதமின்றி - உடனடியாக - உருவாக்கவேண்டும் என்று அரசை வலியுறுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாயில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவிருக்கிறது.

சண்டிலிப்பாய், சங்கானைப் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

காலை 10 மணிக்கு கட்டுடைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் பேரணி, சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பணிமனையைச் சென்றடையும். அங்கு வைத்துக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்படும்.

இந்தப் பேரணியில் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்படவிருக்கின்றன.

✪ சுனாமி அனர்த்தத்துக்கான பொதுக்கட்டமைப்பைத் தாமதமின்றி உருவாக்கி, அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியான முறையில் நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

✪ போராளிகளையும் பொதுமக்களையும் படுகொலைசெய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

✪ இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர அனுமதித்து, அவர்களது இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தினை வழங்கவேண்டும்.(த-86)



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்களுக்கு முன்னாள் யாழ்ப்பாண நகர மேயர் எஸ்.எஸ். நவரட்ணம் ஞாபகார்த்தமாக பத்தாயிரம் ரூபா பெறுமதியான கற்றல்உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் பி.சிவகுமார் கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு முன்னதாக மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அதிபர் க. செல்வகுமாரனும் படத்தில் உள்ளார்.

*(படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)*

# சுனாமி பாதித்த மருதங்கேணி மக்களுக்கு 6 மாத காலத்துக்குள் நிரந்தர வீடுகள்

## யாழ்.அரச அதிபர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.7

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மருதங்கேணிப்பகுதி மக்களுக்கான நிரந்தர வீடமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆறுமாத காலத்துக்குள் அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிக்கப்படும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் நம்பிக்கை தெரிவித்ததாவது:

யாழ.மாவட்டத்தில் சுனாமியால் 5 ஆயிரதது 428 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 2 ஆயிரத்து 724 வீடுகள் மருதங்கேணிப் பிரதேசத்தில் பாதிப்படைந்துள்ளன.

தற்போது மருதங்கேணியில் பாதிப்படைந்த மக்களுக்கு மீள வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், உதவிப் பிரதேச செயலகப் பிரதிநிதிகள், கிராமிய புனர்வாழ்வுச் செயலகத்தினர் ஆகியோர் இணைந்து இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில், மருதங்கேணிப் பிரதேசத்தில் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தொலைவில் அரச காணிகள் வீடமைப்பதற்காக இனங்காணப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மணற்காடு, உடுத்துறை, மருதங்கேணி, ஆழியவளை, பொற்பதி, முள்ளியான், செம்பியன்பற்று தெற்கு, செம்பியன்பற்று வடக்கு ஆகிய இடங்களிலேயே அரச காணிகள் இனங்காணப்பட்டுள்ளன.

இக்காணிகளில் தலா 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

500 சதுர அடி விஸ்தீரணத்தில் சமையலறை, மலசலகூடம் போன்ற வசதிகளுடன் வீடுகள் அமைக்கப்படும். இவ்வீடுகளுக்கான குடிதண்ணர், வசதிகள் பாதைகள், பொதுமண்டபங்கள், கூட்டுறவுக் கடைகள் போன்ற அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

நகர அபிவிருத்தி அதிகார சபை இக் கிராமங்களுக்கான திட்டத்தைத் தயாரித்துக் கையளித்ததும் வீடமைக்கும் வேலைகள் ஆரம்பமாகும் - என்றார். (8-202-203)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 'மத்தியம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பரியோவான் கல்லூரியின அதிபர் எஸ்.தனபாலனிடம் இருந்து கல்லூரியின் பழைய மாணவன் என்.நடராசா பிரதயொன்றைப் பெற்றுக்கொள்வதைப் படததில் காணலாம்.

# கடற்கரைப் பிரதேசத்தில் முருகைக்கல் அணைகள்

## அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.குடாநாட்டில் சுனாமி அனர்த்தம் காரணமாக அழிவடைந்த கடற்கரைப் பிரதேசங்களில் 20 மில்லியன் ரூபா செலவில் முருகைக் கல் அணைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-




பருத்தித்துறையில் இருந்து தொண்டைமானாறு கடற்கரைப் பகுதிவரை இந்த அணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

தற்போது பருத்தித்துறையிலிருந்து இன்பருட்டி வரையான கடற்கரைப் பிரதேசத்தில் அணைகள் அமைக்கப்பட்டுவிட்டன.

வள்ளங்கள் கட்டப்படும் இடங்கள், வள்ளங்களைக் கொண்டுசெல்லும் வாய்க்கால்கள் ஆகிய இடங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு அணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சுனாமியின் போது அடித்துச் செல்லப்பட்டு கரையொதுங்கிய முருகைக்கற்களைக் கொண்டும் இந்த அணைகளை அமைத்து வருகின்றோம் - என்றார். (8-202-203)

# வலி.வடக்கு ஆலயம் செல்ல படையினர் அனுமதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டும், புதுவருடப்பிறப்பை முன்னிட்டும் நடைபெறவுள்ள விசேட பூசைகளில் அடியவர்கள் கலந்துகொள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ அதுரைச்சாமி ஐயர் தெரிவித்தார்.

காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை அடியவர்கள் தமது சொந்த வாகனத்தில் வந்து பூசைகளில் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்குனித் திங்களை முன்னிட்டு நடைபெறவுள்ள விசேட பூசைகள், குளிர்த்தி என்பன எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கும் -

சித்திரைப் புது வருடப் பிறப்பு விசேடபூசை ஆராதனைகள் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன.

(ஐ-204)

# பாடசாலை மாணவரிடையே புதுவருட பரிசுத் திட்டம்

வலி.தெற்கு,ஏப்.7

இவ்வருடம் தமிழ் - சிங்கள புதுவருடததை முன்னிட்டு புதுவருட பரிசுத் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்திற்கமைய புதுவருட தினத்தன்று சகல பாடசாலைகளிலும் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் புத்தகம் ஒன்றைப் பரிசாக வழங்குமாறு பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் தமக்கு பரிசாகத் தரப்படுகின்ற புத்தகங்களை விடுமுறை காலத்தில் வாசித்து முடித்து, இரண்டாம் தவணைத் தொடக்கத்தில் அப்புத்தகத்தை அதிபர் வசம் ஒப்படைக்க வேண்டும்.

அதிபர் தமது பாடசாலையில் இவ்வாறு சேர்க்கப்படுகின்ற புத்தகங்களில் பாதி புத்தகங்களைச் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பாடசாலை நூலகங்களுக்கு வழங்க வேண்டும்.

அதிபர்கள் பெற்றோர்களை அழைத்து இத்திட்டத்தைப் பற்றி விளக்க வேண்டும். மாணவர்களுக்கும் இதுபற்றி எடுத்துக் கூறுவதுடன், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## மர்மப் பொருள் வெடித்து குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,ஏப்.7

மர்மப் பொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

அல்லாரை தெற்கில் கடந்த சனிக்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

குடியிருப்புக் காணியை மண்வெட்டியினால் கொத்தி, துப்புரவு செய்தபோது மர்மப் பொருள வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த கார்த்தி கணபதிப்பிள்ளை (வயது 40) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (8-117)

## நூலகங்களின் இரவல் வழங்கும் பகுதி நேரம் நீடிப்பு

தென்மராட்சி,ஏப்.7

சாவகச்சேரி நகரசபை பொது நூலகங்களின் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதி இயங்கும் நேரம் ஒரு மணித்தியாலத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, நுணாவில், மீசாலை ஆகிய பொது நூலகங்களின் இரவல் கொடுக்கும் பகுதி மாலை 6 மணிவரை திறந்திருக்குமென நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த நேரநீடிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந் நூலகங்களின் வாசிப்பு பிரிவு இரவு 7 மணி வரை இயங்கிவருகின்றது. (8-117)

## வடிகால்களில் தேங்கியிருந்த மணல் அகற்றப்பட்டது

குருநகர்,ஏப்.7

குருநகர் பகுதியில் அமைந்துள்ள பெரிய வடிகால்களில் தேங்கியுள்ள மணலை அகற்றும் பணியில் யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆறு மாதங்களாக அகற்றப்படாமல் இருந்த இந்த மணலை அகற்றும் பணிகள் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெற்றன.

இமமணல், வடிகால்களில் தேங்கிக் கிடந்ததனால் நீரோட்டம் தடைப்பட்டதுடன் நுளம்பும் பெருக்கமடைந்து காணப்பட்டது.

(8-51)

## வீதிக்குப் பெயர் சூட்டப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.7

மானிப்பாய் ஜே/139 கிராம அலுவலர் பிரிவில் உள்ள சிறிமுருகன் அருள்நிலையம் அமைந்துள்ள வீதிக்கு 'மார்க்கண்டேயர் வீதி' என வலி.தென்மேற்கு பிரதேசசபை திட்டமிடற் பிரிவினால் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மானிப்பாய் கனகசபை வீதிக்கும் லோண்டன் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள சிறிமுருகன் அருள் நிலையம் உள்ள வீதிககே 'மார்க்கண்டேயர் வீதி' எனப் பெயரிடப்பட்டுள்ளதாகச் சபைச் செயலாளர் பி.விக்டர் அறிவித்துள்ளார்.

மேற்படி அறிவிப்பு 01.04.2005 இல் இருந்து செயற்படவுள்ளதுடன், விரைவில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (8-185)

## சுவர் இடிந்து விழ்ந்து ஒருவர் காயம்

தென்மராட்சி,ஏப்.7

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வீட்டுச் சுவர் இடிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த 5ஆம்திகதி மட்டுவில் தெற்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செளந்தரராஜன் (வயது 35) என்பவர் இரு கால்களிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (8-117)

## தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கு 40ஆசிரியர்கள் நியமனம்

தென்மராட்சி,ஏப்.7

தேசிய கல்வியியற்கல்லூரியில் பயிற்சியை முடித்துக்கொண்ட நாற்பது டிப்ளோமா ஆசிரியர்கள் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு கடந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எட்டு ஆசிரியர்களும் ஏனைய பாடசாலைகளுக்கு 32ஆசிரியர்களும் கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு 21பேரும், விஞ்ஞானப்பிரிவுக்கு ஆறுபேரும் கணித பிரிவுக்கு மூன்று பேரும், மனைப்பொருளியல் பிரிவுக்கு நான்கு பேரும், விவசாய பிரிவுக்கு மூன்று பேரும, நடனம், சங்கீதம், இந்துசமயம் ஆகிய பிரிவுகளுக்குத் தலா ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(8-117)

## புத்தாண்டுச் சிறப்புத் தள்ளுபடி....



Sony
National
T.V., VCR
மற்றும்
Amplifier



(அம்பிலி பயர்) செற்றப் றேடியோக்கள்
(Sony Kenwood, Pioneer)
என்பனவும் FH Model
Sony Radioக்களும்
விற்பனைக்குண்டு.



**SHAN MULTY TRADE CENTRE**

**150, K.K.S. Road,**
**Jaffna.**

(43890)(26-14-34) T.P.: 021 222 7442.


## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.7

தீவகக் கல்வி வலயத்தில் காரைநகர் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய முன்பள்ளிகளின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் காரைநகர் கமநல சேவைகள் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.தவராசா கேட்டுள்ளார். (3-204)

## சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்பு

சங்கானை,ஏப்.7

சங்கானைப் பகுதியில் பொது இடங்களில் பூட்டப்படாத நிலையில் விடப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட சைக்கிள்களை சங்கானைப் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை, பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றுள்ளனர்.

இவற்றைப் பெற்றுக்கொள்ள பொலிஸ் நிலையத்திற்கு வந்த சைக்கிள் உரிமையாளர்கள், பொலிஸாரின் அறிவுறுத்தலின்பேரில், புதுப்பூட்டு வாங்கிவந்து, அவர்களுக்குக் காட்டிய பின்னர், உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்களிடம் சைக்கிள்கள் ஒப்படைககப்பட்டுள்ளன. (3-29)

## மலேசியாவில் வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றிப் பணம் மோசடி புரிந்த நபர்!

### வவுனியாவில் கைதானார்

வவுனியா,ஏப்.7

மலேசியா நாட்டில் விஸாவும் வேலையும் பெற்றுத்தருவதாகத் தெரிவித்து மோசடி புரிந்தார் என்று கூறப்படும் ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மற்றும் மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு மலேசியாவில் விஸாவுடன் தொழிலும் பெற்றுத் தருவதாகக்கூறி 9 லட்சம் ரூபாவை மோசடி செய்தவர் என்று கூறப்படும் ஒருவரே கைது செய்யப்பட்டு விசேட நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸ் சிறுகுற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சி.பூலோகராஜா தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சந்தேக நபருக்கு எதிராகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். மீண்டும் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்க வேண்டிய நாளில் அவர் தலைமறைவாகியதையடுத்து கடந்த 2ஆம் திகதி சந்தேக நபர் மீண்டும் கைதுசெய்யப்பட்டு விசேட நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக சிறுகுற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-164-202)




உ
காரைநகர்
**திருமணற்காடு அருள்மிகு - ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியன்னையின்**
**புதிய சித்திரத் தேர் விழா சிறப்பிதழ்(2005-04-07 வியாழக்கிழமை)**



## சித்திரத்தேரேறி கும்பநாயகி தீர்வுகொண்டு வருகிறாள்

சித்திரத் தேரினில் சிம்மத்தி லமர்ந்து வருகிறாள்
சீரோங்கு காரைத் திருப்பதியின் தேவி தேரேறிவருகிறாள்
புத்தாண்டில் தமிழருக்கு புதுவாழ்வைத்தர தாய் தேரேறிவருகிறாள்
பூலோகம் ஆள்பவள் புவனமாதா பக்தர்கள் சூழ தேரேறிவருகிறாள்
இத்தேசத்தின் நலன் காத்து தீர்வருள தேவி தேரேறி வருகிறாள்
இரங்கிடும் அன்பரின் குறை தீர்க்கும் கும்பத்து நாயகி தேரேறிவருகிறாள்
திக்கெட்டும் புகழ்பரப்பும்திருமணற் காட்டிலமர்ந்தவள் தேரேறி வருகிறாள்
தேசத்து நாயகியாய் புதிய சித்திரத் தேரினில் வருகிறாள்

எழிலான கலைத்தேரில் ஏறிவரும் தாயே இரங்கிடம்மா
எத்தனை காலமாய் ஏனோ பாரா முகமாய் இருக்கின்றாய்
பொழில் சூழ்ந்த காரைநகரின் புதுமைத் தெய்வம் நீயல்லவா
பொங்கி வரும் துயரம் பெருகி புவனமெங்கும் சூழ்ந்ததம்மா
அஞ்சேலென்று அபயம் தந்து காத்த தெய்வம் நீயல்லவா
அவனியெங்கும் பெருகிடும் அவலத்தை ஒழித்திடம்மா
தஞ்சமென்று உன்தாளை தமிழர்யாம் பணிந்தோமம்மா
தாயாக அரவணைத்து தமிழருக்குகந்த தீர்வைத் தந்திடம்மா.

**கவிமாமணி, மதுரகவி, காரை. எம்.பி. அருளானந்தன்-**

**(புதிய சித்திரத்தேரில் அன்னை பவனி வரும் திருக்காட்சி இன்று (07.04.2005) இடம்பெறுகின்றது )**
**தாயின் புதிய சித்திரத் தேர் விழா சிறக்கவும், நாட்டில் அருளாசி பெருகி சாந்தி, சமாதானம் நிலவவும் பிரார்த்திப்பவர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| **மலர் றெக்ஸ்றைல்**<br>இல. 18,பெரியகடை. (67-A)<br>யாழ்ப்பாணம்.T.P. 2791 | **யாழ். காலணியகம்(பாட்டா ஏஜென்சி)**<br>இல.11, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,<br>யாழ்ப்பாணம் T.P .3152 | **றூபா பன்முகவர்த்தகம்**<br>104, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம்.T.P. 2479 | **லலிதா புடவை மாளிகை**<br>5.6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.<br>$B_3$, சந்தை வீதி வவுனியா. T.P. 5260 |

| | | |
|---|---|---|
| **இளவரசி சேலைச் சோலை**<br>(பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்)<br>57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்T.P .2503 | **ரட்ணம் பார்மசி அன்ட் குறோசறி**<br>384, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம் T.P. 2667 | **வேல் முருகன் ஆலை**<br>113, 115, மானிப்பாய் வீதி-யாழ்ப்பாணம் T.P .5468<br>வேல்முருகன் அரிசி ஆலை, தொல்புரம்- சுளிபுரம். |

(சி-42117)


## 16 ஆம் நாள் நினைவு அஞ்சலி

07.04.2005



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 - 06 - 1933 | 22 - 03 - 2005 |

திருமதி
# பரமேஸ்வரி அம்பலவாணர்

இனுவில் - கோண்டாவில்
காரைக்கால் சிவன் கோயில் ஆதீனகர்த்தா
அம்பலவாண சுவாமியாரின்
அருமையான வாழ்க்கைத் துணைவியாயிருந்து,
ஆற்றாது அழுது அல்லற்பட்டு வந்த
ஆயிரக்கணக்கான நோயாளரின்
உளநோயும் உடல்நோயும் நீங்குவதற்கு
உறுதுணையான தாயாயிருந்து,
எங்களைப் பெற்றுவளர்த்து
ஆளாக்கிய தெய்வமே!
மருமக்களையும் மக்கள் போல
அரவணைத்து அன்பு பாராட்டிய அன்னையே!
உங்கள் ஆன்மா
சிவபெருமான் திருவடியில் அமைதிபெற
வேண்டித்துதித்து அஞ்சலி செய்கின்றோம்!

'ஸ்ரீரங்கம்'
கே.கே.எஸ்.வீதி, இணுவில் கிழக்கு. (43881) (39-14-34-26) - குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 - 11 - 1977 | 22 - 02 - 2005 |

அமரர்
# வர்ணகுலசிங்கம் சிவரூபன் (ரூபன்)

(பாக்கியரத்தினம் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்,
தரன் றேடர்ஸ் - விற்பனையாளர்)

அன்புக்கோர் இலக்கணமாய் நல்லதொரு
பண்புக்கோர் உறைவிடமாய் - இப்
பாரினிலே வந்து தோன்றாயோ?
பாச அலை நீ காட்டி எம்மை விட்டுவிட்டு
பாதியிலே சென்றதெங்கே - நண்பா?
பரிதவித்துப் போய் நிற்கின்றோம்
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

சங்கானை. (43885)(26-14-34) - நண்பர்கள்.

சுனாமி நிவாரண நிதிக்கென

# ஆசிரியர்கள் வழங்கிய பணத்தை மீளளிக்க பேரவை ஏற்பாடு

## புலிகளின் தலைமை கோரியதால்

கிளிநொச்சி,ஏப்.7

வண்ணிப் பிரதேச ஆசிரியர்கள் 'சுனாமி' உதவி நிதிக்கென கல்வி மேம்பாட்டுப் பேரவையிடம் வழங்கிய பணத்தை ஆசிரியர்களிடம் திரும்ப வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ பல்வேறு அமைப்புகளும் நிதி திரட்டின. அந்த வகையில், கல்வி மேம்பாட்டுப் பேரவையும் நிதி சேகரித்தது. இதற்கு கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்கள் தமது சம்பளத்தில் ஒரு பகுதியை வழங்கியிருந்தனர். எனினும, ஆசிரியர்களின் குடும்பச் சூழ்நிலையையும், அவர்களில் பெரும்பாலானவர்கள் மீளக் குடியமர்ந்து தமது வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டி உள்ளனர் என்பதையும் கருத்திற்கொண்டு, அவர்கள வழங்கிய பணத்தை மீண்டும் அவர்களிடமே வழங்கும்படி விடுதலைப் புலிகளின் தலைமை கோரியுள்ளதாகக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின பொறுப்பாளர் தெரிவித்தார்.

வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பக் கடுமையாக உழைத்து வரும் ஆசிரியர்கள், 'சுனாமி'யால் பாதிக்கப்பட்ட தமது உறவுகளின் துயர்துடைக்க நிதி வழங்கியமை அளப்பரிய சேவையாகும் என்று விடுதலைப் புலிகளின் தலைமை தெரிவித்துள்ளது என்றும் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் மேலும் கூறினார். (ஒ-301)



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றுப்படுத்தும் நிகழ்வாக முல்லைத்தீவு, அளம்பில் திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் அளம்பில் மற்றும் இரணைப்பாளையில் பலிக்களம் என்ற ஆற்றுகையை சமீபத்தில் மேடையேற்றினர். பேராசியர் நீ மரியசேவியர் அடிகளாரின் வழிநடத்தலில், ஜீ.பி.பேர்மினஸ் நெறிப்படுத்திய அந்த ஆற்றுகையில் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

### தற்காலிகமாக மின் விநியோகம்

கிளிநொச்சி,ஏப்.7

கிளிநொச்சியில் மின்சார சபையினால் வழங்கப்பட்டுவந்த மின்விநியோகம் இயந்திரக் கோளாறு காரணமாகக் கடந்த சில நாள்களாகத் தடைப்பட்டிருந்தது. இதனையடுத்து தற்காலிகமாக சிறிய மின் பிறப்பாக்கி மூலம் குறைந்த வலுவுடைய மின்சாரம் பிரதான இடங்களிற்கு மட்டும தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.(ஒ-305)

# பூநகரி கூட்டுறவுச் சங்கம் ஊடாக சுனாமி நிவாரணம் விநியோகம்

பூநகரி,ஏப்.7

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகின்றது. பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக இந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையின் கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இதில் ஒருவருக்கு அரிசி அல்லது கோதுமை மா, பருப்பு, சீனி, சமையல் எண்ணெய், உப்பு ஆகியவை வழங்கப்படுகின்றன.

ஒரு கிழமைக்குரிய பொருள்களை, அதே மாதத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பயனாளிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஒ)

### குளிர்த்தி விழா

கிளிநொச்சி,ஏப்.7

கிளிநொச்சி பொறிக்கடலை அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை வருடாந்த குளிர்த்தி விழா இடம்பெற்றது. பாரம்பரிய வழிபாட்டு முறையைக் கொண்ட இந்த ஆலயத்திற்கு அன்றையதினம் பெருமளவான பக்தர்கள் வந்திருந்தனர்.

ஆலயத்தில் அன்று நீர்ச்சோறு வழங்கல், குளிர்த்தி, தீ மிதித்தல் மற்றும் ஏலம் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஒ-305)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# அடைக்கலம் தந்த பாடசாலைக்கு மக்களின் நன்றி கூறும் நிகழ்வு

புதுக்குடியிருப்பு,ஏப்.7

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில தஞ்சமடைந்த பொதுமக்கள், அக்கல்லூரிச் சமூகத்துக்கு நன்றி கூறும் நிகழ்வொன்றை நடத்தினார்கள்.

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த மக்கள் முள்ளியவளை விவேகானந்தா கல்லூரியில் தஞ்சமடைந்தனர்.

அப்போது, அப் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் உட்பட கல்லூரிச் சமூகம் தமக்கு உதவியதற்காக கள்ளப்பாடுப் பகுதி மக்கள் சமீபத்தில் நன்றி கூறும் நிகழ்வை நடத்தினார்கள். அப்போது பாடசாலைக்கு நினைவுச் சின்னம ஒன்றையும் அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நன்றி கூறும் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை மாவட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், கடற்புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் ரங்கன், கள்ளப்பாடு கிராம தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் ஜெகதீஸ்வரன உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

சுனாமிப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தாம் அல்லலுற்ற வேளையில் தமக்கு அடைக்கலம் தந்துதவிய பாடசாலைச் சமூகத்தை இந நிகழ்வில் கள்ளப்பாடு கிராம மக்கள் நெகிழ்வுடன் வாழ்த்திக் கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-353)

# விசுவமடு-சுண்டிக்குளம் வீதியை புனரமைக்கக் கோரிக்கை

பரந்தன்,ஏப்.7

பரந்தன் - முல்லைத்தீவு பிரதான நெடுஞ்சாலையில் விசுவமடு சந்தியில் இருந்து பிரமந்தனாறு ஊடாகச் சுண்டிக்குளம் செல்லும் வீதி மோசமான நிலையில் உள்ளது. இதனால் இவ்வீதி வழியாகப் பொருள்களை எடுத்துச்செல்லும் விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் போன்றோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது விசுவமடுவில் இருந்தும் சுற்றுலாப பகுதியிலிருந்து பிரமந்தனாறு வரைக்கும் வீதித் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இடையே உள்ள சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் திருத்தப்படவில்லை.

இதேவேளை, கடந்த பெப்ரவரி மாதம் புளியம்பொக்கனை - நாகதம்பிரான் ஆலய உற்சவகால விசேட கூட்டத்தில் வீதி அபிவிருத்தி (R.D.A.) திணைக்களத்தினரால் ஆலய உற்சவகாலத்திற்கு முன்னர் குறிப்பிட்ட இவ்வீதி புனரமைப்புச் செய்யப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால், ஆலய உற்சவம் நிறைவு பெற்றதும், இதுவரைக்கும் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகின்றது. (ஒ-352)

# ஆங்கில அறிவை மாணவர்பெற பெற்றோரின் ஊக்கம் வேண்டும்

ஒட்டுசுட்டான்,ஏப்.7

அடிப்படை வசதியும் வீட்டில் பெற்றோரின் ஊக்கமும் கவனிப்பும் இல்லாததாலேயே மாணவர்கள் ஆங்கில மொழித்திறனில் பின்னடைவைச சந்திக்கின்றனர். ஆகவே, ஆங்கில அறிவை மாணவர் பெற பெற்றோர் ஊக்கமளிக்க வேண்டும்

- இவ்வாறு கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் பொ.அருமைச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னிப் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் அடிப்படை ஆங்கில அறிவைப் பெற முடியாதுள்ளனர். அத்துடன், ஆங்கில மொழி அறிவுபெற பாடசாலையை மட்டுமே அவர்கள் நம்பியுள்ளனர். அவர்களால் வெளி இடங்களில் ஆங்கில அறிவைப் பெறமுடியாதுள்ளது.

சில பெற்றோருக்கு ஆங்கில அறிவு இருந்தும் கூட அதனைத் தமது பிள்ளைகளுக்கு ஊட்டுவதற்கான கவனிப்பு இல்லை. பாடசாலையில் ஆங்கிலம் கற்பித்தபோது அடிப்படை ஆங்கில அறிவு இல்லாததால் மாணவர்கள் அதில் ஆர்வம் காட்டாது தவறிவிடுகின்றனர் - என்றார் அவர். (ஒ-341)

### கிளிநொச்சி மருத்துவமனை கிளினிக் தினங்கள்

கிளிநொச்சி,ஏப்.7

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றுவரும் மருத்துவ கிளினிக்குகளில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக் கிளினிக் நாளை மறுதினம் சனிக்கிழமையும் -

கசரோக கிளினிக் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் -

இடம்பெறவுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ஒ)

பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள

# முல்லை.மாவட்டத்தை மேம்படுத்த அரசின் ஒத்துழைப்பு போதவில்லை

## அரச அதிபர் வேதனை

ஒட்டுசுட்டான்,ஏப்.7

பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் அரசின் ஒத்துழைப்புக் கிடைப்பதாக இல்லை.

- இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார்.

ஒட்டுசுட்டானில் நடைபெற்ற கூட்டமொன்றில உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

முத்தையன் கட்டுக்குளத்தின் நிலை குறித்து இங்கு பேசப்பட்டது. அதைவிட முத்தையன்கட்டு பொறியியலாளரும் அறிக்கை ஒன்றினைத் தந்துள்ளார். எனவே, இதனைக் கருத்திற்கொண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படவேண்டும் என்றும் கேட்டுள்ளேன்.

நாம் பல குளங்களைப் பற்றி ஆராய்ந்த போது அரசின் நடவடிக்கை ஆறுதலாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சுனாமி அனர்த்த புனரமைப்புக் கூட அப்படித்தான். மக்கள் கிட்டத்தட்ட 38 கிராமங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். 6,600 குடும்பங்கள் நிர்க்கதியாகி நிற்கின்றன. 5,400 வீடுகள் அழிந்து விட்டன. 20 திணைக்களக் கட்டடங்கள் கடலுககுள் சென்றுவிட்டன. 10 உத்தியோகத்தர்களை நாம் இழந்துவிட்டோம் அரச கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களை கடல் அடித்துச் சென்றுவிட்டது.



முத்தையன் கட்டுப்பகுதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களை அழைத்துப் பேசியுள்ளோம். புனர்வாழ்வு அமைச்சு சுனாமி தாக்குதல் இடம்பெற்ற இடங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைப் பார்வையிட உள்ளது. இதற்கு சம்மதம் கிடைத்துள்ளது. ஆகவே, பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்.

அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் நான் உறுதியாக இருக்கின்றேன். ஒட்டுசுட்டான் பிரதேசம் மிகவும் வளம் குன்றிவிட்டது. இதனால் எமது பிரதேச செயலகத்தை ஒட்டுசுட்டானில் ஸ்தாபித்துள்ளோம். இதனை மையமாக வைத்துச் சகல திணைக்களங்களையும் இங்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் - என்றார். (ஒ-341)



இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலைக்கு காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை தம்பதி ஞாபகார்த்தமாக மின்பிறப்பாக்கி ஒன்று கையளிக்கப்பட்டது.

இதற்காக நிகழ்வில் சபாபதிப்பிள்ளை தம்பதியின் மகன் ச.நகுலேஸ்வரன், பாடசாலை அதிபா ச.புண்ணியமூர்த்தியிடம் சம்பிரதாய பூர்வமாக மின் பிறப்பாக்கியைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

திருமதி நகுலேஸ்வரன் , சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கௌரி சந்திரசேகரம், கண்டாவளை ம.வி. முன்னாள் அதிபர் கோ.செல்வராசா, கோட்டக் கல்வி அலுவலர் வி.இராசகுலசிங்கம், கல்மடுநகர் அ.த.க.பாடசாலை அதிபர் சு.இரவீந்திரன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

# அம்பாள் குளப்பகுதி மக்களுக்கு காணி உரிமம் வழங்குவதில் தாமதம்

கிளிநொச்சி அம்பாள் குளப் பிரதேச மக்களுக்கு காணி உரிமம் வழங்குவது தாமதமாகி வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அவர்களுக்கான காணி உரிமப் பத்திரங்களைப் பிரதேச செயலகம் வழங்கி வருகிறது. ஆனால், இந்தப் பணி மிகமெதுவாக இடம்பெறுவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் மக்கள் சார்பில் அம்பாள் குள கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கிருஷ்ணசாமி இக்குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இச்செயற்பாட்டால் அக் குடும்பங்களின் நிரந்தர குடியிருப்புக்கான அபிவிருத்திச் செயறபாடுகள் தாமதமடைவதாகவும் -

உரிய அதிகாரிகள் இதனைக் கூடிய கவனத்தில் எடுக்குமாறும் - சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்தார். (ஒ-301-202)

## ஸ்ரீ பரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமம்

### பேருந்து சாரதி வெற்றிடம் - விண்ணப்பம் கோரல்

தகைமைகள்:
வயதெல்லை: **40 தொடக்கம் 60 வயது வரை**
பால்: **ஆண்.**

**பேருந்து சாரதி அனுமதிப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், நற்சான்றிதழ், பழைய அனுபவச் சான்றிதழ்.**

கல்வித் தகைமை: *குறைந்தது 8ஆம் ஆண்டு கற்றிருத்தல் வேண்டும்.*

**விண்ணப்ப முடிவு திகதி: 15-04-2005**

குறிப்பு: இருப்பிட, உணவு வசதிகள் உண்டு. தொண்டூதியம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரர் சுய விவரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமம்,**
**வதிரி, கரவெட்டி.** (சி-42154)(26-14-45)

செயலாளர்,
**ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமம்.**

## கெயார் சர்வதேசம் - இலங்கை

**எதிர்காலத்திற்கான சமுதாய முன்னெடுத்தல் திட்டம் (LIFT project) திட்ட உதவியாளர் வருமான ஊக்குவிப்புத் திட்டம் (PAIGA) ஆட்சேர்ப்பு**

**(1 - வெற்றிடம் வன்னி)**

பதவி: **திட்ட உதவியாளர் வருமான ஊக்குவிப்புத் திட்டம்**
கல்வித்தகைமைகள்: **வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரி**
முன் அனுபவம் : **வருமான ஊக்குவிப்புத் தொடர்பான துறையில் 3வருட அனுபவம்.**
சம்பளம் : **தகைமைக்கு அமைவாகக் கெயாரின் வழமையான நன்மைகளையும் கொண்டிருக்கும்.**
நியமனம் : **புதுப்பிக்கக்கூடிய ஒப்பந்த அடிப்படை**
பொறுப்புக்களும் கடமைகளும்:

- ▲ வருமானம் தரும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தை அபிவிருத்தி செய்தல்.
- ▲ நடவடிக்கைகளை அமுல்படுத்தல்
- ▲ கண்காணிப்பு, மீளளிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல்.
- ▲ வலைப்பின்னல் அடிப்படையிலான தொடர்புகளை ஏற்படுத்தல்.
- ▲ திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தலும் அதனை விவரணப்படுத்தலும்.

தகுதியுடையோர் சுய விவரக்கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன் Care - International, No.15 Kandy Road, Jaffna என்ற முகவரிக்கு 5நாள்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பங்களை யாழ்ப்பாணம், பரந்தனில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கலாம். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

Team Leader, (சி-42153)(26-14-45)
Care International, Jaffna.

## சேவை நலன் பாராட்டு



உயர்திரு
**சிவசம்பு சண்முகநாதன்**
**உப அதிபர் இ.ஆ.சே. வகுப்பு -I**

**சேவை விவரம்**

நு / கோல்புறாக் த. வித்தியாலயம்
அக்கரப்பத்தன .ஆசிரியர் 07.12.72 -12.03.77
யா/ பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை,
பயிற்சி ஆசிரியர் 13.03.77-31.12.78
யா/ சன்மார்க்கமகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்
ஆசிரியர் 01.01.79-14.03.82
யா/ மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்
ஆசிரியர் 15.03.82-12.03.83
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியர்
13.03.83-25.06.96
உப அதிபர் 26.05.96-28.02.2005

ஆலமரம் போல நீர் தழைக்க - அதில்
ஆயிரம் பறவைகள் அறிவுப்பசி போக்க
அன்பின் சிகரமாய் அறிவின் உடைமையாய்
ஆயிரமாயிரம் இதயங்களில் என்றும்
இருபத்தெட்டாய்
அன்பும் கண்டிப்பும் சுறுசுறுப்பான சேவையும்
அவையடக்கமும் நேர்மையுள்ளமும் நிறைந்து
கண்ணியம் காத்த கடமை வீரனே!

கருத் தொருமித்த மெமோறியலின் மினிக்
கொம்பியூட்டரே
காவலனே கணித வல்லுநனே
தையலுடன் - நீவிர்
காலமெல்லாம் சிறந்து நீடூழி வாழ்ந்திடுவீர்

ஆசிரிய நல்லுறவு மன்றம்,
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை,மானிப்பாய்.

(43863)(51-17-45)


## ஜே. ஆர். எம். புடைவை அகம்

## J.R.M. TEX

**எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு**

*மாபெரும் மலிவு விற்பனை!*

சாறி, சல்வார், ஸ்கேட்டன் பிளவுஸ் ஆகிய வகைகளுக்கு விலையில் மூன்றில் ஒரு பங்கு விசேட கழிவு உண்டு. அத்துடன், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கல்யாணப் பட்டுப்புடைவைகள், சாறி, சல்வார், சேட்டிங், சூட்டிங் சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் சகல விதமான ஆடை வகைகளையும் எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.**

நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்:

**ஜே.ஆர்.எம். புடைவையகம்**
(43906)(26-14-45) **பிரதான வீதி, பருத்தித்துறை.**



## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுரிதார் துணி வகைகள், கவுண் கோட் துணி வகைகள், திருமணப் புடைவைகள், புடைவைகள், சுரிதார் லேடீஸ் கவுண் வகைகள், லேடீஸ் T சேட், ஸ்கேட் & பிளவுஸ், பான்சிப் பொருள்கள் ஒரிவிலேம் கிறீம் வகைகள் என்பன நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்:

**பபு கொமினிக்கேசன்**
**30, வளாக வீதி, திருநெல்வேலி.**
(43916)


# ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஏப்.7

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9மணிக்கு நாடகவிழா முத்தமிழ் மன்றத் துணைத் தலைவர் கு.உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா கலந்துகொள்வார்.

நிகழ்வில் அருணா இல்லத்தின் 'வீணான தாலாட்டு', காவேரி இல்லத்தின் 'சாகாத மனிதம்', சுவர்ணா இல்லத்தின் 'என்கடன் பணி செய்து கிடப்பதே', ராதா இல்லத்தின் 'முகமற்ற மனிதர்' ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை சி.இராஜேஸ்வரன் தலைமையில் முத்தமிழ் விழா இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் வைத்திய கலாநிதி செ.சிவஞானசுந்தரமும் சிறப்பு விருந்தினராக கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் கலந்துகொள்வர்.

முத்தமிழ் விழாவில் கலை நிகழ்வுகளாக நுண்கலை மாணவிகள் வழங்கும் முத்தமிழுக்கு அஞ்சலி, முதலாம், இரண்டாம் வருட இசைத்துறை மாணவர்கள் வழங்கும் இசை விருந்து, க.யூட் சிவாகரன் பேச்சு, சங்கீத கலாபூஷணம் எஸ்.குமாரசாமி இசைக்கச்சேரி, தி.பாலேந்திரன் கவிதை, சத்தியவான் சாவித்திரி வில்லிசை, ஞானசவுந்தரி இசைநாடகம் இசைத்துறை மாணவர் களின் பல்லியம், காத்தவராயன் சிந்து நடைக்கூத்து எனபன இடம்பெறும்.

(ஒ-202)

## நிவாரணம் நிறுத்தம்

மண்டைதீவு,ஏப்.7

ஏ-9பாதையூடாக அல்லது குருநகர் துறைமுகம் ஊடாக வந்து மண்டைதீவில் குடியமர்ந்தவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவு கடந்த மாதம் தொடக்கம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் மூலம் வந்தவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவும் தரைப் பாதை ஊடாக வந்தவர்களுக்கு 25ஆயிரம் ரூபாவும் மீளக் குடியமர்ந்தவர்களுக்குக் கொடுப்பனவாக அரசால் வழங்கப்பட்டன.

இந்தநிலையில், இவர்களுக்கான கொடுப்பனவு கடந்தமாதம் வழங்கி முடிக்கப்பட்டது. அதன பின்னர் நிவாரண முத்திரைகள் வெட்டப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தமக்கு நிவாரணப் பொருள்களைத் தொடர்ந்து வழங்குமாறு முறையிட்டுள்ளதாகவும் மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவு பெற்றுக் கொண்டவர்களுக்கு நிவாரணப் பொருள் கொடுப்பனவை நிறுத்தவேண்டாம் என்று தாம் கோரியுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

(ஒ-88)

## ACTION CONTRE LA FAIM

### ASSISTANT FOOD SECURITY PROGRAM FOOD SECURITY ANALYSIS (JAFFNA)

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Tricomalee districts. **We require services of an Assistant Food Security program Manager far Jaffna.**

This position is suitable for a sociologist, economist or an agriculturist who has strong experience in running Food Security programs.

The Assistant Food Security Program Manager will Manage the **collection** and analysis of livelihood data and representation at technical meetings in Jaffna. He/ she will contribute to technical strategy development, proposal writing and reporting under the responsibilities of the Food Security Program Manager in Jaffna and the Assistant Food Security Coordinator in Colombo.

Applicants must be fluent in English and able to do basic communication in Tamil and Sinhala. Computer literacy, especially MS Word and Excel is required.

**Category:** Senior position
**Duration:** 1 year with insurance coverage
Apply within 20 days or as soon as possible:

**ACF Food Security Job Vacancy,**
**No. 5 Rucca Road,**
**Jaffna.**
(C/42150)(26)

## ACTION CONTRE LA FAIM

### FOOD SECURITY ANALYSIS OFFICER (JAFFNA)

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Tricomalee districts. **We require services of an assistant Food Security Analysis Officer for Jaffna.**

This position is open to people with experience in Food Security data collection and analysis. Background in sociology, economics or agriculture is an advantage.

The Assistant Food Security Officer will conduct interviews **with different sectors of the population for quick analysis of livelihood** vulnerabiliy. He will be involved in writing reports under the responsibilities of the Assistant Food Security Program Manager in Jaftna.

Applicants must be fluent in English and able to do basic communication in Tamil and Sinhala. Computer literacy. especially MS Word and Excel is required.

***Category:*** medium
***Duration:*** 8 months with insurance coverage, renewable

Apply within 20 days or as soon as possible:

**ACF Food Security Job Vacancy,**
**No. 5 Rucca Road,**
**Jaffna.**
(C/42151)(26)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திதி 07 . 04 . 2005



தோற்றம் 10-09-1903
மறைவு 29-03-1995
அமரர்
**கந்தையா குமரேசு**

தோற்றம் 06-06-1908
மறைவு 05-04-1995
அமரர்
**தங்கம்மா குமரேசு**

*ஆண்டுகள் பத்தானாலும் ஆறவில்லை எம்துயரம்*
*இவ் உலகை விட்டுநீர் பரலோகம் சென்றுவிட்டீர்*
*நாளும் உம்மை நினைத்தே நாமிங்கு*
*நெஞ்சுருகித் தவிக்கின்றோம்.*

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

**குடும்பத்தினர்,**
**குமரேஸ் வாணிப நிலையம்.**
(சி/42149)(32-14-45-26)

# பருத்தித்துறை லீக்கின் ஏற்பாட்டில் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

கரவெட்டி,ஏப்.7

சுனாமியால் பாதிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் வளர்ச்சி நிதிக்காக மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தவிருக்கின்றது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் வடமராட்சிப்பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்படும் இச்சுற்றுப்போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றது.

இச்சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேச உதைபந்தாட்ட லீக்குகளிடம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-70)



பூநகரிக் கல்விக் கோட்டத்தில் உடற்பயிற்சிப் போட்டிகளில் பூநகரி ம.வி. முதலிடம் பெறறது. உடற்பயிற்சிக் குழுவினர் பாடசாலை அதிபர் பொன். தில்லைநாதன், போட்டியை நெறிப்படுத்திய செல்வி பொ.ஆனந்தி ஆகியோருடன் காணப்படுகின்றனர். *(படம்: பூநகரிச் செய்தியாளர்)*

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகள் இரண்டும், அணிகளின் சமநிலையை எடுத்துக்காட்டியதுடன், இரு போட்டிகளுமே வெற்றி தோல்வியை சமநிலை உடைப்பு உதைகள் மூலமே தீர மானித்தன. இப்போட்டிகள் கால் இறுதி ஆட்டத்தின் முதல் போட்டிகளாக அமைந்துள்ளன. தொடர்ந்து இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களின் போட்டிகளின் வேகத்திற்கு கட்டியம் கூறிய போட்டிகளாகவும் இது அமைந்திருந்தது என்றும் கூறலாம்.

முதலில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத திற்கும், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் ஆட்டம் இடம்பெற்றது.

போட்டியின் வேகம் விறுவிறுப்புடன் தொடங்கிய நேரம் முதல் இறுதிவரை காணப்பட்டது. இதேநேரம் ரசிகர்களின் குதூகலத்திற்கும் எல்லையில்லையென்றே கூறவேண்டும்.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கோல்கள் பெறும் ஆவலில் மேல் ஏறி விளையாடின. இந்நிலைமையில் ஞானமுருகன் அணியைச் சேர்ந்த மத்தி முன்னணி வீரர் தனக்குக் கிடைத்த பந்து ஒன்றைப் பெற்று முன் நகர்த்திச்சென்று எதிரணியினரை வெட்டி மத்தி வலது முன்னணி வீரர் தசரதனிடம் கொடுக்க, அவர் அதனை எதிரணியினரின் கோல் கம்பத்தினுள் அடித்துத் தனது அணிக்காக முதலாவது கோலையும் பெற்றுக்கொண்டார்.

முதல் கோல் பெறப்பட்டதைத் தொடர்ந்து இரு அணி வீரர்களும் இடையே சூடு பிடித்து விளையாடத் தொடங்கினார்கள். இந்நிலைமையில் லக்கிஸ்ரார் அணியினர் எடுத்த பெரு முயற்சி காரணமாக வலது முன்னணி வீரா டினோஜன் தனது அணியைச் சேர்ந்த வலது பக்க உள்ளக வீரர் ஜெயந்தனிடம் கொடுத்த பந்தை ஜெயந்தன் யாரும் எதிர்பாராத வண்ணம் எதிரணியினரின் பின்னணி வீரர்களின் எதிர்ப்பைக் கடந்து அடித்துத் தனது அணிக்கான கோலைப் பெற்றுக்கொண்டார்.

ஆட்டம் சமநிலை பெற்றது. இரு அணிகளும் தடுத்து விளையாடியதுடன் கோல்கள் பெறும் முனைப்பையும் பெற்று விளையாடினார்கள். மீண்டும லக்கி ஸ்ரார் அணிக்கே கோல்கள் பெறும்வாய்ப்பு கிடைத்தது.

உதயன் ஊடக அனுசரணை

வலது பக்க உள்ளணி வீரா ஜெயந்தன் எதிரணியினரிடம் இருந்து பெற்ற பந்தை முன்னணி வீரர் ரமேஷ்காந்திடம் கொடுக்க அவர் அதனை அடித்து இரண்டாவது கோலைப் பெற்றுக் கொண்டார்.

முதல்பாதி ஆட்டம் 2 : 1 என்ற கோல்கணக்கில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணியினர் கவனமாக விளையாடிய போதிலும ஞானமுருகன் அணியினர் மிகவும் நெருக்கமாக எதிரணியினரின் கோல்கம்பத்தைத் தொடர்ந்து ஆக்கிரமித்து கோல் பெறும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தனர்.

லக்கி ஸ்ரார் அணியின் பின்னணி வீரர்கள் எதிரணியினரின் முயற்சியை முறியடிக்கும் முகமாக தமக்குக் கிடைத்த பந்துகளை எவ்வளவு விரைவாக முன்னோக்கி அடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக தமது பக்கத்தில் இருந்து பந்துகளை அடித்து வெளியேற்றினார்கள்.

ஞானமுருகன் அணியின் முன்னணி வீரர் குணதீஸ்வரன் தனக்கு பின்னணி வீரரினால் அடித்துக்கொடுக்கப்பட்ட பந்தைப் பெற்றுச் சென்று மத்தி முன்னணி வீரா தசரதனிடம் கொடுகக அவர் தேவையை உணர்ந்து பந்தை மிகவும் கவனமாக அடித்துத் தனது அணிக்கான இரண்டாவது கோலைப் பெற்றுக்கொண்டதன் மூலம் ஆட்டம் சமநிலைபெற்றது.

ஆட்டம் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் தலா ஐந்து வழங்கப்பட்டன.

இதில் லக்கி ஸ்ரார் அணியினர் ஐந்து உதைகளையும் கோலாக்கிக்கொள்ள ஞானமுருகன் அணியினர் 4 உதைகளை மட்டுமே கோல்களாக்கினார்கள். ஆட்ட முடிவில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 7 : 6 என்ற கோல் கணக்கில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த விநாயகர் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் கவனத்துடன் விளையாடியதை அவதானிக்க முடிந்தது. இந்நிலையில் கரணவாய் மத்தி அணியின் மத்தி முன்னணி வீரர் தர்சன் தனக்குக் கிடைத்த பந்தை முன் நகர்த்திக்கொடுக்க இடதுபக்க முன்னணி வீரா அசோக் சாியான முறையில் கோல் கம்பத்தை நோக்கி அடித்துத் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

இதனை கோல்காப்பாளர் தடுத்து நிறுத்த முயன்ற போதிலும் கூட இப்பந்து அவரின் கையில் பட்டு தலைக்கு மேலால் சென்று கோல்கம்பத்தினுள் நுழைந்துகொண்டது.

முதல்பாதி ஆட்டம் 1 : 0 என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் சோதனை மிகுந்த ஆட்டமாகக் காணபபட்ட போதிலும் இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. இரு அணிகளும் மிகவும் நெருக்கமாக விளையாடிக் கொண்டு இருக்கும் போது கரணவாய் மத்தி அணியின் தண்டனை உதை எல்லைக்குள் கரணவாய் மத்தி வீரா ஒருவர் பிழையான முறையில் விளையாடியமைக்காக தண்டனை நேர் உதையொன்றை விநாயாகர் அணிக்கு மத்தியஸ்தர் வழங்கினார். இதனை விநாயகர் அணியின் வீரா பாஸ்கரன் அடித்துத் தனது அணிக்கான கோலைப் பெற்றுக்கொண்டார்.

ஆட்டம் சமநிலை பெற்ற போதிலும் மேலதிகமான கோல்கள் எதனையும் இரு அணிகளும் ஆட்டம் முடிவடையும் நேரம்வரை பெறாமையால் தலா ஒரு கோல் என்ற சமநிலையில் ஆட்டம் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் தலா ஐந்து வழங்கப்பட்டன.

இதில் நான்கு உதைகளை கரணவாய் மத்தி அணியினர் கோல்களாகவும் விநாயகர் அணியினர் மூன்று உதைகளையும் கோல்களாக்கிக் கொண்டார்கள். ஆட்டம் முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது. (ஐ-86)

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம் சென்.சேவியர்–பொமேர்ஸ் அணிகள் மோதல்

வலி.வடக்கு,ஏப்.7

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்சசிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்திலேயே இவ்விரு அணிகளும் மோதும்.

மற்றொரு ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக் கழகமும் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 5 மணிக்கு மோதுகின்றன. (3-86)

## வடமராட்சி வலய வலைபந்தாட்டம்

# மெதடிஸ்த பெண்கள் பாடசாலை இரு பிரிவுகளில் சம்பியனானது

கரவெட்டி,ஏப்.7

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இருபிரிவுகளில் சம்பியனானது.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**15 வயது**

மெதடிஸ்த பெ.உ.த.பாடசாலை, வடஇந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**17 வயது**

வட இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெ.உ.த.பாடசாலை, கம்பர்மலை வித்தியாலயம.

**19 வயது**

மெதடிஸ்த பெ.உ.த. பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி,

முதல் இரு இடங்களைப்பெறும் அணிகள் யாழ் மாவட்ட பாடசாலைகள் போட்டிக்குத் தகுதி பெறுகின்றன. (3-70)

# மாவட்ட மென்பந்துப் போட்டி 16 ஆம் திகதி ஆரம்பமாகின்றது

வலி.தெற்கு,ஏப்.7

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டிகள் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் கனகரட்ணம் மாகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மைதானங்களில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில், நாவற்குழி மகாவித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெ.மி.கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய அணிகளும் -

யாழ்ப்பாணம் கனகரட்ணம் மகாவித்தியாலயத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வேலணை மத்திய மகா வித்தியாலயம் ஆகிய அணிகளும் - போட்டிகளில் கலந்துகொள்ள உள்ளன. (3-152)

## பிரதேச செயலர் பிரிவு வலைபந்தாட்டம்

# உடுவில் மத்திய வி.க. சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,ஏப்.7

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியல் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் இப்போட்டியில் தமது திறமைகளை வெளிப்படுத்தி விளையாடியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

முதல்பாதி ஆட்டத்தில், உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் 15 புள்ளிகளையும் வளர்பிறை வியைாட்டுக் கழகம் 09 புள்ளிகளையும் பெற்றநிலையில் முடிவடைந்தன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாகவும் விரைவாகவும் விளையாடின.

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் 10 புள்ளிகளையும், வளர்பிறை விளையாட்டுக் கழகம் 09 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

ஆட்ட முடிவில் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் 25 இற்கு 18 புள்ளிகள் என்ற கணககில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை வெறறு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்தை இணுவில் லம்போதரா விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டது. (3-86)

## வலி. தெற்கில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

வலி. தெற்குப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும 16ஆம், 17ஆம் திகதிகளில் சுன்னாகம் ஸ்கந்வரோதயக்கல்லூரி மைதானத்தில் காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் 17 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. (3-190)

# மறைந்த பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இத்தாலியில் அனைத்து விளையாட்டுக்களும் நிறுத்தம்

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் 2ஆம் ஜோன்போல் மறைவையடுத்து, இத்தாலியில் இவ்வாரக் கடைசியில் நடைபெற இருந்த விளையாட்டுப் போட்டிகள் அனைத்தையும் நிறுத்திவைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது அந்நாட்டின் உயா நிலை விளையாட்டு அமைப்பான ஒலிம்பிக் குழு. அதன் தலைவர் கியானி பெருட்ச்சி இதற்கான உத்தரவை வெளியிட்டுள்ளார்.

இதனால், இத்தாலியில் பெரும்பாலான கால்பந்து லீக் ஆட்டங்கள், ஐஸ்ஹொக்கிப் போட்டி, கூடைப்பந்தாட்டங்கள், கரப்பந்து லீக் ஆட்டங்கள் மற்றும் உள்ளூர் விளையாட்டுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இமாலா சர்க்யூட்டில் நடைபெறவிருந்த 'பெராரி சாலஞ்ச்' கார் பந்தயங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அடுத்தவாரம் தொடங்கும் சம்பியன் லீக் போட்டிகளை முன்னிட்டு மிலான், ஜுவன்டாஸ், 3ஆவது இடத்தில் உள்ள இன்டர் மிலான் ஆகிய கழக அணிகள் முக்கியமான ஆட்டங்களில் பங்கேற்கவிருந்தன. தவிர, ஞாயிற்றுக்கிழமை 6 லீக் ஆட்டங்களும் நடைபெறவிருந்தன. அனைதது மே பாப்பரசரின் மறைவால் நிறுத்திவைக்கப்பட்டன.

விளையாட்டு தொலைக்காட்சி சேவைகளிலும கூட தற்போது பாப்பரசரின் இறுதி நிகழ்வுச் செயதியே ஒளிபரப்புச் செய்யப்பட்டுவருகின்றன. (க-3)

## பிரதேச செயலக உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் மாலை 4 மணியளவில் ஆரம்பமாகின்றது.

இந்தப்போட்டியில் 15 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 23.04.2005 திகதி மாலை 5 மணியளவில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது இதில் தொடர்மாடி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் விளையாட்டுகழக அணி மோதுகின்றது. (3-190)

# கண்ணீர் அஞ்சலி

எமது இலங்கை வங்கிக் கிளையின் நிறைவேற்றதிகாரி
திரு.ஸ்ரீஸ்கந்தவரோதயம்
அவர்களின் அன்புத் தந்தை

## கந்தர் வைத்தியலிங்கம்

அவர்கள் 04.04.2005 திங்கட்கிழமை
காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன், அமரரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை வங்கி, சுன்னாகம்.** — **முகாமையாளரும் ஊழியர்களும்.**

(சி.42159)(42-11)



உ

## சர்வதேச இந்துமத குருபீடம்
## சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

இணைந்து
அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கிடையில்
நடத்தும் 2005ஆம் ஆண்டிற்கான

## சமய இலக்கிய அறிவுப் போட்டி

**வினாத்தாள்கள் வெளியாகியுள்ளன**
போட்டி முடிவு திகதி **18.05.2005**
வினாத்தாள்கள் கிடைக்கும் இடங்கள்:

**சங்கானையில்**
சிவஸ்ரீ
**சிவநித்தியானந்த சிவாச்சார்யார்**
(சர்வதேச இந்து மத குருபீட
யாழ். மாவட்டச் செயலகம்)
ஸ்ரீ முருகமூர்த்தி வீதி, சங்கானை.

**யாழ்.சுன்னாகத்தில்:**
சிவஸ்ரீ
**நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ கதிரமலைச்சிவன்
கோயில்,
சுன்னாகம்.

**மல்லாகத்தில்:**
பிரம்மஸ்ரீ **மு.நாகேந்திர சர்மா**
பழம்பிள்ளையார் கோயில்,
மல்லாகம்.

**திருகோணமலையில்:**
சிவஸ்ரீ **சோ.ரவிச்சந்திரக்குருக்கள்**
ஸ்ரீபத்திரகாளி கோயில்,
திருகோணமலை.

**வவுனியாவில்:**
ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் கோயில், வவுனியா.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்**
**சர்வதேச இந்துமத குருபீடம்**
46,7th, Lane. Kotahena, Colombo - 13,
Tel/Fax: 2393436, Cell: 0722-422239
E.Mail: iyappathasan@ yahoo.com

(43919)(42-11)


## பரிசாரகர் பயிற்சி

வடமராட்சி,ஏப்.7

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகள், மலேரியாத்தடுப்புப் பிரிவு ஆகியவற்றில் பணியாற்றிய தொழிலாளர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 30 பேருக்குப் பரிசாரகர் பணிக்கான பயிற்சி வகுப்பு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமானது.

இப்பயிற்சி வகுப்பினை யாழ்.பிராந்திய பிரதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எஸ்.சிவபாதம் ஆரம்பித்து வைத்தார். (ஒ-173)

## ஊடகப் பயிற்சி

கொழும்புத்துறை,ஏப்.7

பாதுகாவலன் பத்திரிகையும் யாழ்.மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து நடத்தும் ஊடகவியலாளருக்கான பயிற்சி நெறி நாளை வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து 3 தினங்களுக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இபபயிற்சியில் பங்குகொள்ள விரும்புவோர் புனிதவளன் கத்தோலிக்க பாதுகாவலன் பணிமனையில் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் கேட்டுள்ளார்.

பயிற்சியின் இறுதியில் பங்கு கொண்டமைககான சான்றிதழ் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் வழங்கப்படும் என்றும் தொரிவிக்கப்பட்டது.

(ஒ-30-202)

## சுனாமியால் பாதிப்படைந்த பாடசாலைகள் புனரமைப்பு

வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 123 பாடசாலைகளைப் புனரமைக்கச் சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 39 பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 36 பாடசாலைகளும, திருகோணமலை மாவட்டத்தில் 25 பாடசாலைகளும், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் முறையே 12,11 பாடசாலைகளும் சுனாமி அனர்த்தத்தின் போது சேதமடைந்திருந்தன.

யுனிசெவ், அகதிகளுக்கான நோர்வேசபை, உலகதரிசன நிறுவனம், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம், சர்வதேச றோட்டரிக் கழகம், சர்வதேச கல்வியகம் ஆகிய சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவ்னங்கள் இது தொடர்பான உடன்படிக்கையைக் கல்வியமைச்சுடன் செய்துள்ளன. (ஒ-84)

## பாலத்தைத் திருத்தக் கோரிக்கை

காரைநகர் பழைய கண்டி மீன் சந்தைக்கு முன்பாக உள்ள வீதியின் பாலம் உடைந்து ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. பாலம் உடைந்து போக்குவரத்துப் பாதிக்கப்பட்டபோது அப்பாலத்திற்குத் தகரம் போட்டு தற்காலிகமாகப் போக்குவரத்துச் செய்ய வழி ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அப்பாலத்தை நிரந்தரமாகப் புனரமைக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை - என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-86)


## பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்



**INTERNATIONAL SHOTOKAN KARATE ASSOCIATION**
(S.K.I.F)

**சென்சாய் சந்திரகுமார்**
2ஆம் கறுப்புப்பட்டி
சொந்த முகவரி:
சாந்தை. பண்டத்தரிப்பு
தற்போதைய முகவரி:
வேலணை.

**சீகான் பொனி றொபேட்**
8ஆம் கறுப்புப் பட்டி
கொழும்பு.

**சென்சாய் றதீஸ்**
4ஆம் கறுப்புப் பட்டி
துன்னாலை வடக்கு.
துன்னாலை.

*இவர்கள் சீரோடுஞ் சிறப்போடும்*
*பல்லாண்டு வாழ உளமார வாழ்த்துகின்றோம்.*

**- மாணவர்கள் -**
**(வேலணை, பண்டத்தரிப்பு)**

(43920)(42-11-15)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 668 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 05-4-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4397650 - 4413499 |

**வெற்றி இலக்கங்கள்**
**08 17 32 34**

லக்கினம் விருச்சிகம்

ஜக்பொட் பரிசு
ரூபா.25,33,600/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 33,00,800/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,43,792 | 10/- | 34,37,920/- |
| 2.இலக்கங்கள் | 31,518 | 20/- | 6,30,360/- |
| 1.இல + லக்கினம் | 31,179 | 30/- | 9,35,370/- |
| 2.இல + லக்கினம் | 2,838 | 100/- | 2,83,800/- |
| 3.இலக்கங்கள் | 837 | 500/- | 4,18,500/- |
| 3.இல + லக்கினம் | 82 | 5,000/- | 4,10,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 25,33,600/- | - |
| மொத்தம் | 4,10,255 | - | 75,68,200/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 75,68,200/-

தொடர் இல. 5358414 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**4400048-0-14**
**4412747-6-79**
**4409038-1-29**
**4402463-1-37**
**4402595-8-97**





# HAPPY BIRTHDAY
## 2ND 07.04.2005

**கில்றோய், சர்மிளா தம்பதிகளின் செல்வப்புதல்வி எபியா, தனது 2ஆவது பிறந்தநாளை கனடா ரொறன்டோவிலுள்ள தனது இல்லத்தில் இன்று [07.04.2005] வியாழக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.**

**எபிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, லொயிட் மாமா, நிம்மி மாமி, ரியூனி சித்தி, பிரபா சித்தப்பா, பூட்டி, அப்பப்பா, அப்பம்மா, நியூமன் அங்கிள் அனைவரும் லூர்து அன்னையின் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.**

HAPPY BIRTHDAY
EFFIEA

சென்மேரிஸ்லேன்,
தும்பளை,பருத்தித்துறை.

தகவல்
அம்மப்பா.

(43879) (56-17-45)



உ

ஓம் சக்தி

**இன்று (07.04.2005) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறுகின்ற**

# காரைநகர் மணற்காடு அருள்மிகு
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் புதிய சித்திரத்தேர்
# வெள்ளோட்ட விழா

**இனிதே சிறப்புற அம்பாளைப் பிரார்த்திக்கும்**

## கனகசபை தர்மகுலசிங்கம்

144/2, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

"பழமுதிர்சோலை"
அம்மன் வீதி, காரைநகர்.

(43918)(42-11-15)

# முஸ்லிம் சமாதானச் செயலகத்தினர் கனடா பிரதிநிதிகளுடன் சந்திப்பு

கனடா சம்மேளனங்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் தூதரக அதிகாரிகளுடன் முஸ்லிம் சமாதானச் செயலகத்தினர் நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

முஸ்லிம் சமாதானச் செயலகத்தின் சார்பில் அதன் தலைவர் ஜாவிட் யூசுப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி., நு.ஆ. கட்சித் தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி சந்திப்பில் கொழும்புக்கான கனடா தூதரக அலுவலர்களும் பங்குபற்றினர். அமைதி, சமாதான முயற்சிகளில் முஸ்லிம் தரப்பினர் அரசினால் புறக்கணிக்கப்படுவது குறித்து இந்தச் சந்திப்பின்போது முஸ்லிம் சமாதானச் செயலகத்தின் பிரதிநிதிகள் கனடா பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினர் - என்று தெரிவித்தனர். (எ-க)

# முன்பள்ளித் திறப்பு விழா

கற்கோவளம் புனிதநகர் விடிவெள்ளி பாலர் பாடசாலை திறப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் கே.வசந்தகுமார் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாடசாலையைத் திறந்து வைப்பார்.

புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் கொழும்புப் பணிப்பாளர் எஸ்.ரணசிங்க விசேட விருந்தினராகவும் இதன் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் அ.அ.உதயகுமார், வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரைசத்தியசீலன் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-173)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 06 1926 — உதிர்வு 11 04 2002



### திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம்

திதி: சதுர்தசி

**அன்பும் பாசமும் நிறைந்த அம்மா உங்களை நினைத்து நினைத்து உருகுகின்றோம்.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம். (43929)(29-16-18)

## நினைவகலாப் பாமாலையும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 02 08 1910 — இறப்பு 11 03 2005



### அமரர் நமசிவாயம் பொன்னம்மா அம்மையார்

நினைவகலா பாமாலை

அன்பொடு பண்பும் அறநெறி வாழ்வும்
கண்ணியம் கடமை கடவுள் சிந்தனையுடன்
ஆண்டுகள் தொண்ணூற்றைந்து இவ் அவனியில்
தாயென, நல்ல தகைமைசேர் பேர்த்தி யென்றிட
பூட்டியுமாகி புகழுடன் பெய்தினாய்
ஆறு பிள்ளைகளை அன்பொடு வளர்த்தாய்
மூவர் ஆணும் மூவர் பெண்ணுமாய் -
மூதாட்டியுனை முறைப்படி பேணினோம்
வேலணை மண்ணில் விழுதுகள் படர்ந்திட
ஆண்டுகள் பலவாய் அம்மண்ணில் வாழ்ந்து
சீர்பல பெற்று மக்கள் சிறப்பெலாம் கண்டாய்
தாயுன தன்மை தரணியில் மறவோம்
அன்னையே உன்னை அனுதினம் நினைந்து
கண்களால் சொரியும் கண்ணீரினை நல்குவோம்.

அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (08.04.2005) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வேலணை சாட்டி மண்டபத்திலும் சபிண்டீகரணக்கிரியைகள் 10.04.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வைமன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த வைபவத்திற்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசமேதராய் வருகைதந்து, அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

11.02.2005 இல் இயற்கை எய்திய எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் நேராக எமது இல்லத்தில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தோருக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் எம்முடன் துன்பத்தைப் பகிர்ந்து ஆறுதல் கூறியோருக்கும், ஏனைய பல வழிகளில் எமக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல. 20/5, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.* (43922)(29-16-18)

பாசமிகு மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள். உறவினர்கள்.


## திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0777 747095
0776 258204
(சி-42167)(29-16-18)


## வேலைக்கு ஆள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் கோழிப்பண்ணையில் வேலைசெய்வதற்கு வேலையாள் தேவை.
*தகுந்த சம்பளம் வழங்கப்படும்.*
தொடர்பு: T.P.: 077 3086972
(சி-42168)(29-16-18)

## ஆறாவது பிறந்தநாள் வாழ்த்து

எட்மண்ட் மரியசீலன் – கிறிஸ்ரீனா மரியசீலன் தம்பதிகளின் புதல்வி

### செல்வி டில்ஜா மரியசீலன்

தனது ஆறாவது பிறந்தநாளை இன்று வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு, இரணப்பாலையில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, அண்ணா டிலக்ஷன், அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, பெரியத்தை, அன்ரா, மாமாமார், மாமிமார், அண்ணன்மார், மச்சான், மச்சாள்மார், உற்றார், உறவினர் எல்லோரும் நீடூழி சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

யாழ்ப்பாணம்.

தகவல்: எட்மண்ட் மரியசீலன் (அப்பா).
(...69)(29-16-18)


DCCA
மக்கள் வங்கி அருகில் ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

A/L 2007 கலைப்பிரிவு மாணவர்களுக்கான "கலைச்சூரியன்களின்" ஒன்றிணைவில் புதிய உதயம் உங்கள்

SLECTION TEAM

| | |
|---|---|
| இ.நா.: | சிவமகாலிங்கம் |
| தமிழ்: | நாகதமிழிந்திரன், பாலமுரளி |
| பொரு.: | இராஜேஸ்வரன் |
| அளவையியல்: | ஜெயசுரேஸ் |
| புவியியல்: | கிரிதரன் |
| அரசறிவியல்: | பொன்சந்துரு |
| நாடகம்: | சந்திரன் |
| வரலாறு: | சுஜிகரன் |
| ஆங்கிலம்: | மதன் |

ஆரம்பம்:
10.04.2005 ஞாயிறு 8.00 a.m.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(சி42166)(29-16-18)

நாதன்ஸ் சினிமா குளிரூட்டப்பட்டது ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு தாவடிமைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த






கா.நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், நயீசா, ரவிகிருஷ்ணா நடிப்பில்
சச்சின் (சீல்ஸ்)
கா.நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
சத்தியராஜ், சீபிராஜ், பானுபிரியா, வடிவேலு நடித்த
ஜோர் (சீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும்
8 முதல் கையோடு கை

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
லண்டன் (சீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)

மனோகரா யாழ்ப்பாணம்
பார்த்திபன, காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடி பூக்கள் (சீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30
9.30 இற்கு மட்டும்
தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த தேவதையைக் கண்டேன்

ஜப்பானிலிருந்து!
இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான வாகனங்களுக்குமுரிய வாகனக் கண்ணாடிகள், தனி வில்லுத் தடுகள், செற்தகடுகள் மற்றும் ரயர், ரியூப், றிம், றேடியேற்றர், லைற் வகைகள், புஸ் வகைகள், பற்றறி வகைகள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் அனைத்தும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அம்பாள் மோட்டோர்ஸ்

பிரதான தபாற்கந்தோருக்கு அருகில் (43915)(29-16-18)
133/6, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

நிலவு.COM இன் தமிழ் கணனி 2005
கண்காட்சியும் கருத்தரங்கும்

காலம்: ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை
காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை
இடம்: யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
ஊடக அனுசரணை: உதயன்
(சி-42163)(29-16-18)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் முன்னாள் உற்பத்தி முகாமையாளரும் பதில் முகாமைப்பணிப்பாளரும் 'ஸ்ரீரங்கம், கே.கே.எஸ். றோட், இணுவிலைச் சேர்ந்தவருமான திருமதி தாட்சாயினி அருள்நேசன அவர்களின் அன்புக்குரிய தாயார்

### திருமதி அம்பலவாணர் பரமேஸ்வரி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பணியாளர்கள்,
யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உ.வி.வை.சே. கூட்டுறவுச் சங்கம்.
(43927)(29-16-18)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா பொன்னுத்துரை

[உரிமையாளர், பொன்மலர் ஸ்ரோர்ஸ், அளவை கொன்வெக்சனறி வெக்கப் (Sun Brand) அளவெட்டி]



அளவெட்டி வடக்கு, பெத்தாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னுத்துரை அவர்கள் நேற்று (06.04.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தர்மலிங்கம் - காலஞ்சென்ற நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் மலரவன் (கனடா), பிரதீபா (2002 A/L யாழ்ப்பாணக் கல்லூரி), கேகயன் (2005 A/L Maths, மகாஜனக் கல்லூரி), தேசிகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி, சரஸ்வதி, சத்தியவதி, பாலச்சந்திரன், யோகவதி (கனடா), தர்மசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சண்முகாதேவி, செல்வராசா, சின்னத்துரை, ஆனந்தஜோதி, ஜெயமலர், சத்தியானந்தன் (கனடா), சங்கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீஸ்கந்தராஜா (நோர்வே), ரதிமதி (கிளிநொச்சி), வசிமதி (ஜேர்மனி), எதிர்வீரசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் தவராணி (நோர்வே), கேதீஸ்வரன் (உப தபால் அதிபர், கிளிநொச்சி), கிருஸ்ணகுமார் (ஜேர்மனி), கோமதி (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்டத்தரிப்பு வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.*
*T.P. No. : 0602 - 212558*
*0773 - 024376*

தகவல்:
பொ. சகுந்தலாதேவி (மனைவி).
(43932)(29-16-18)

### தம்பு பசுபதி



உடுப்பிட்டி, வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பசுபதி நேற்று (06.04.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா, முருகன், சின்னவி, வள்ளி ஆகியோரின் அன்புச சகோதரியும் காலஞ்சென்ற நடராசா (ஜெகநாதன்) மற்றும் ஜெகதீஸ்வரி, யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தா, காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் வனிதா, ஜெனிதா, ஜெயவண்ணன், நிலாவண்ணன், யோகனா, ஆதித்தன், ஆதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் அடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுப்பிட்டி.* (43930)(29-16-18)

தகவல்:
தி.ஜெகதீஸ்வரி (மகள்).
கு.சாந்தன் (மருமகன்).

# அரச ஊடக மறுசீரமைப்பு விடயம் சந்திரிகா - மங்கள பனிப்போர்

கொழும்பு,ஏப்.7

அரச ஊடகங்களை மறுசீரமைக்கும் விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிற்குமிடையில் பனிப்போர் நிலவுவதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஏற்கனவே, அரச ஊடகங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும், மறுசீரமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இவ்வாறிருக்கையில், அரச ஊடகங்களை மறுசீரமைப்பதற்கான புதிய குழுவொன்றை அமைச்சர் மங்கள சமரவீர ஏற்படுத்தியிருக்கிறார் என நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லேக்ஹவுஸ் நிர்வாக நடவடிக்கைகள் நிதியமைச்சரின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்தும், லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் தவிர்ந்த பணிப்பாளர்சபை மாற்றப்படவேண்டுமென ஜனாதிபதி பணித்திருப்பதையடுத்தும், ஜனாதிபதிக்கும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவிற்குமிடையில் இருந்த முரண்பாடு உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊடகத்துறை மறுசீரமைப்பு விவகாரம் குறித்துப் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதியிடம் அமைச்சர் மங்கள சமரவீர நேர அனுமதியைக் கோரியுள்ளபோதும், இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்படவில்லையென்று தெரியவருகிறது. (எ-க)

## விமானக் கட்டணங்களை ஸ்ரீலங்கன் அதிகரிக்கும்

சர்வதேச சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரித்திருப்பதால் விமானக் கட்டணங்களின் மாற்றங்களைச் செய்யவேண்டிய தேவை எழுந்திருப்பதாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

ஏற்கனவே, ஆழிப்பேரலை அனர்த்தத்தின் தாக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் இந்த எண்ணெய் விலை அதிகரிப்பை இனிமேலும் தாங்கிக்கொள்ளாதென்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பேச்சாளர் சந்தன டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கேற்ப குறுகிய காலத்திற்கு கட்டண மாற்றமொன்றைச் செய்யவும் எரிபொருள் விலை குறையும்போது கட்டண வீதத்தைகுறைக்கும் வகையிலும் கட்டமைப்பொன்று உருவாக்கப்படுமென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமது நிறுவனத்திற்கு இந்த எண்ணெய் விலை அதிகரிப்பு மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக சந்தன டி சில்வா மேலும் தெரிவித்தார்.

## கல்முனைக்குடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனைக்குடி புதிய நகர மண்டபத்தில் அமைந்திருந்த களஞ்சியசாலைக்கு காவலிருந்த இரு பொலீஸார் மீதே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. இதில் லலித் (வயது-37) என்ற பொலீஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார். இவர் ஆழிப் பேரலை ஏற்பட்ட பின்னர் விசேட கடமைக்காக பதுளை கந்தகெட்டிய பொலீஸ்நிலையத்திலிருந்து கல்முனைப் பொலீஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டிருந்தார்.

இவருடன் இருந்த மற்றைய பொலீஸ் நபரான வீரசேன தப்பியோடி உயிர் பிழைத்துக் கொண்டார்.

முகமூடி அணிந்து வந்த 8 பேரே தம் மீது தாக்குதல் நடத்தினர் என்று அவர் பின்னர், சம்பவம் குறித்துப் பொலீஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் பொலீஸார் இருவரினதும் ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டையும், 240 ரவைகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கல்முனைப் பொலீஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மோப்ப நாய்கள் அழைக்கப்பட்டு தேடுதலும் நடத்தப்பட்டது. (எ-க)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
A/L 2006
வெப்பப் பௌதிகம்
ஆரம்பம்:09.04.2005 சனி 10 a.m.
BY: ஜெயசீலன்
(43908)(18-16-38)

யாழ். நகரில் O/L DAY CLASS இற்கு நிகரில்லாத் தனித்துவமான ஆசிரியர் குழுவைக் கொண்ட ஒரே நிறுவனம்
விக்னா கல்வி நிறுவனம்
பிரிவு - 2
O/L DAY CLASS
ஆரம்பம்: 11.04.2005 (8.30-2.30)
★ பிரிவு 2இல் சொற்ப மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
★ கணித, விஞ்ஞான விசேட வகுப்புகள் நடைபெறும்.
★ சென்ற ஆண்டுபோல் இம்முறையும் பிரிவு 6 மட்டுமே.
★ தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும். (சீ-42160)(38-16-18)

## ஒடுக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போற்றப்படுவது.

உலகத்தின் உன்னதமான ஆன்மீகத் தலைவர் என்ற ரீதியில், வறுமைப்பட்ட மக்களதும், ஒடுக்கப்பட்ட இனங்களினதும் விடிவிற்காக அவர் அரும்பணியாற்றினார். அன்பு, காருண்ணியம், சகோதரத்துவப் பண்பு போன்ற சீலங்களை அவர் பரப்புரை செய்தார்.

சுதந்திரம், விடுதலை, சமத்துவம் போன்ற உயரிய மனித விழுமியங்களில் நம்பிக்கை கொண்ட அனைத்து மனிதப் பிறவிகளும் பாப்பரசரின் உன்னதமான வாழ்க்கையையும், அவரது உயரிய சிந்தனைகளையும் என்றும் தமது நெஞ்சில் நிறுத்தி அவரை கௌரவிப்பார்கள்.

தமிழ் மக்களின் சார்பாக எமது ஆழ்ந்த துயரையும், கவலையையும் தெரிவிக்கின்றேன். - என்று உள்ளது. (எ)

## எஸ்.பி. - ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைமைக்கு எதிராக எஸ்.பி.திஸநாயக்கா சீற்றம் கொண்டிருப்பதையடுத்து அவரைச் சாந்தப்படுத்தும் விதத்தில் கட்சியின் நுவரெலியா மாவட்டச் செயற்குழுத் தலைவராக மீண்டும் அவரை நியமித்திருக்கின்றார் கட்சித் தலைவர் ரணில்.

இதற்கான நியமனக் கடிதம் சிறையிலிருக்கும் திஸநாயக்கவுக்கு நேற்றே வழங்கப்பட்டது.

திஸநாயக்கா சிறையில் இருப்பதால் இப்பதவியை நுவரெலியா மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான நவீன் திஸநாயக்கவுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை கட்சிக்குள் முன்வைக்கப்பட்டது.

ஆனால், ஏற்கனவே கட்சித் தலைமைக்கு எதிராகச் சீற்றம் கொண்டிருக்கும் எஸ்.பி.திஸநாயக்காவை மேலும் குழப்பக்கூடாது என்பதற்காக அந்தப் பதவி அவருக்கே என்பதை உறுதிப்படுத்தும் கடிதத்தை கட்சித் தலைமை அவசர அவசரமாக நேற்று அனுப்பிவைத்தது எனத் தெரிகின்றது.

இதற்கிடையில் சிறைவிதிகளுக்கு உட்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் திஸநாயக்காவை அரசின் முக்கிய அமைச்சர்கள் இருவர் சென்று சந்தித்துள்ளனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. (எ-க)

## அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு எதிராக ஆக்ரோஷமான கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் அணிவகுத்துச் சென்றனர்.

கோயில் வீதியில் அமைந்திருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தைப் பேரணி சென்றடைந்தது.

அங்கு வைத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டப் பிரதித்தலைவர் வொய்றரோ விநோறெனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரை யாழ்.நல்லூர் பிரதேச பொது அமைப்புகளின் செயலாளர் சி.சிவஞானசேகரம் கையளித்தார்.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் தம்முடன் சுலோக அட்டைகளையும் பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

சுலோக அட்டையில் காணப்பட்ட சுலோகங்கள் வருமாறு.

★ இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கொடு

★ சிங்கள அரசே சின்னத்தனமான யுத்தத்தைக் கைவிட்டு, முடிந்தால் பெரும் யுத்தத்திற்குவா.

★ குடியிருப்புக்களும் பள்ளிக்கூடங்களும் உன் முற்கம்பிகளின் முற்றுகைக்குள்.

★ வருங்காலம் எமதாகும் தமிழீழம் உருவாகும். (த-7-13-30-86-173)

இதய அடைப்பு நோய் குணமாக வேண்டுமா?
இதய அடைப்பு நோய்க்காக வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறவேண்டியதில்லை. எங்களுடைய ஆயுர்வேத மருத்துவம் மூலம் அதனைச் சில வாரங்களில் குணமாக்கலாம். இதய அடைப்புத் தொடர்பான சிகிச்சைகளை நாங்கள் உரியமுறையில், குறைந்த செலவில் வழங்குகிறோம்.
விவரங்களுக்கு:
FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Approved & ISo 9001 : 2000 Qms Cetified Company.
(சீ-42164)(38-18-16)

# பொருளாதார வளர்ச்சி வீதம் இலங்கையில் வீழும் நிலை

கொழும்பு,ஏப்.7

இலங்கையின் கடந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 5.5 வீதமாக இருந்தபோதும், ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக அது இவ்வாண்டு 5.2 வீதமாகக் குறைவடையக்கூடுமென்று ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்றுத் தெரிவித்திருக்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளுக்கு 20 ஆயிரம் கோடி டொலர்கள் தேவையென இலங்கை அரசு மதிப்பிட்டுள்ளது. மீள்கட்டுமான உதவிகளுக்காக வழங்கப்படும் நிதி வசதியுள்ள ஐரோப்பிய சந்தையில் இறக்குமதிக்குப் பயன்படுத்தப்பட வாய்ப்புகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்கட்டுமான செயற்பாடுகளின் காரணமாக பணவீக்கம் இவ்வருட இறுதியில் 12 வீதமாக அதிகரிக்கக் கூடுமென்றும் கடந்தவருடம் இது ஆக 7.6வீதமாக இருந்ததென்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் கட்டட நிர்மாணப் பொருள்களின் விலைகள் அதிகரித்திருப்பதுடன், தொழிலாளர்களின் பற்றாக்குறையும் இருப்பதாகக் குறிப்பிடும் ஆசிய அபிவிருத்தி வங்கி, பணவீக்கம் 2006 ஆம் ஆண்டில் 9 வீதமாகவும், 2007 ஆம் ஆண்டில் 7.5 ஆகவும் குறையக்கூடுமெனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (எ-க)

## வெலிகந்தையில் கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் தலைமையிலான இந்த ஆணைக்குழு முன்னிலையில் ஸ்மன் அளித்த சாட்சியம் வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் தவிர ஏனைய ஆயுதக்குழு நடமாட்டத்தைப் பொறுத்தவரை எனக்குத் தெரிந்தவரை கருணா குழுவின் நடமாட்டம் உள்ளது.

அதுவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் அது உள்ளது.

எனக்குத் தெரிந்தவரை வெலிகந்தை பிரதேசத்திலுள்ள தீவுச் சேனையில் கருணா குழுவின் முகாம் உள்ளதாக அறிகிறேன். இக்குழுவிற்கு இராணுவ உதவி இருப்பது குறித்து எனக்குத் தெரியாது. இதற்கான ஆதாரங்களும் எம்மிடம் இல்லை.

கருணா குழுவின் முகாம் இருப்பது போர் நிறுத்த உடன்படிக்கை மீறலாகும். துணைப் படை என்பதற்கான சரியான அர்த்தம் எனக்கும் தெரியாது.

ஆனால், கருணாவின் ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் இருக்கின்றார்கள்.

போர்நிறுத்த உடன்படிக்கையின்படி துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டியது அரசின் கடமையாகும்.

கருணா குழுவினரின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்பது குறித்து எனது தலைமையகத்திற்கு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அறிவித்துள்ளேன். அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது குறித்து எனக்குத் தெரியாது. விடுதலைப் புலிகள் மீது இப்படியான தாக்குதல் தொடர்வது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துமா இல்லையா என்பது குறித்து என்னால் கருத்துக் கூறமுடியாது.

எதிர்காலத்தில் இப்படியான தாக்குதல்களை தவிர்ப்பது என்றால் எனது அபிப்பிராயப்படி ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான தொடர்புகள், உரையாடல்கள் மிக நெருக்கமானவையாக இருக்கவேண்டும் - என்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரான லெப்டினன்ட் கேணல் கௌசல்யன் படுகொலை சம்பவம் தொடர்பாக ஆணைக் குழுவினால் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினார்.

சம்பவதினமிரவு 10 மணியளவில் இது குறித்துத் தகவல் கிடைத்தது. உடனே புறப்பட்டுப் பொலனறுவை வைத்தியசாலையைச் சென்றடைய அதிகாலை 2 மணியாகிவிட்டது.

அங்கு ஐந்து சடலங்களைக் கண்டேன்.

மீண்டும் மறுநாள் காலை 10 மணிக்குச் சென்று சடலங்களை எடுத்து வருவதற்கு எங்களால் வழித் துணை வழங்கப்பட்டது.

இது குறித்து பொலீஸ் விசாரணை அறிக்கை எதிர்பாக்கப்படுகின்றது.

அதுவரை இச்சம்பவமானது போர்நிறுத்த உடன்படிக்கை மீறலா, இல்லையா என்பது குறித்துக் கூறமுடியாது.

விடுதலைப் புலிகளின் பயணத்திற்குப் பாதுகாப்பு வழங்குவது பொலீஸாரும், இராணுவத்தினரும் தான். நாம் வழங்குவது வழித்துணையாகும். நான் அறிந்தவரை மேற்படி சம்பவம் இடம்பெற்ற குறிப்பிட்ட பயணத்திற்கு விடுதலைப் புலிகள் பொலீஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்புக் கோரி விண்ணப்பிக்கவில்லை.

இத்தாக்குதல் சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்று இதுவரை கண்டறியப்படாத காரணத்தினால் இச்சம்பவம் போர் நிறுத்த உடன்படிக்கையைப் பாதிக்குமா, இல்லையா என்பது குறித்து எத்தகைய கருத் துக்களையும் இப்போது கூற முடியாது - என்றார் அவர். (கு-க)

## ஜி.சீ.ஈ. சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகள் இன்றையதினமே தமக்குரிய - பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ பெறுபேற்றுத் தாளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் -

பரீட்சைத் திணைக்களம் இம்முறைமுதன் முதலாக ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவருக்கு இந்த ஏற்பாட்டினைச் செய்து கொடுத்துள்ளது என்றும் - ஒரு தகவல் தெரிவித்தது. (எ)

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனவுக்கு உத்தர விட்டார் நீதிவான்.

சம்பந்தப்பட்ட குழந்தை தற்போது சர்வோதய சிறுவர் நிலையத்தில் பராமரிக்கப்படுகின்றது.

குழந்தையைக் கடத்தியவர் எனக் கூறப்படும் பெண் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனலட்சுமி கந்தையா

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி கந்தையா அவர்கள் நேற்று (06.04.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் கந்தையா (A.O.செல்லையா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் தம்பதிகளின் மூத்த புதல்வியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம் கிழக்கு,*
*தொல்புரம்.* (43934)(38-16-18)

தகவல்:
சு.சுந்தரராசா (கண்ணன்).

## நடராசா சிறிபாலா

[இந்திரன் -றேடியோ மெக்கானிக்]



கொக்குவில் மேற்கு, அரசடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிறிபாலா அவர்கள் நேற்று (06.04.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகம்மா தம்பதிகளின் புதல்வரும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் கேசவேந்தன், றனுஜா, கேசரூபன், கேசதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வமலர், ஜெயந்திராணி, சந்திரபாலா, ஜெகதீஸ்வரி, சிறிரங்கநாதன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா, சிறிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னமணி மற்றும் நவரத்தினம், வரதராசா, தர்மகுலசிங்கம், லீலாவதி, உருத்திராவதி, செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2005) வியாழக்கிழமை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி,*
*கொக்குவில் மேற்கு.* (43933)(38-16-18)

தகவல்:
சகோதரர்கள்,
பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.